

திருமகள் நிலையம்

மரகதலிங்கம் □ இந்திரா சௌந்தர்ராஜன் □ திருமகள்

# மரகதலிங்கம்



இந்திரா சௌந்தர்ராஜன்

18
32
21
1



குழப்பமான கேள்விகளோடு, அரைகுறை நம்பிக்கையோடு தான் நமது ஆன்மிகம் உள்ளது.

சான்றோர் உலகமும் தெளிவாய், பொட்டில் அடித்தமாதிரி பதில்கூறியதில்லை. பல ஆன்மிக விளக்கங்கள் பாதிபுரியும், பாதிபுரியாது. இதுதான் இன்றைய ஆன்மிக நிலை. நான் என் நாவல்களில் இந்த நிலையை மாற்ற முயல்பவன்.

இதில் 'உச்சியிலே' என்று ஒரு மர்ம நாவலும் 'ஓசைப் படாமல் ஒரு கொலை' என்று ஒரு குறுநாவலும் வருகிறது.

அவை மரகதலிங்கம்போல ஆன்மிக மர்மத்தைச் சேர்ந்ததல்ல... விறுவிறுப்பையும் புத்திசாலித்தனத்தையும் கொண்டிருக்கும் அந்த நாவல்களும் உங்களை வெகுவாய் கவரும்.


மரகதலிங்கம் ஒருமதிப்பு மிக்க படைப்பு

அதில் எனக்கு சந்தேகமில்லை.

அன்புடன்
**இந்திரா சௌந்தர்ராஜன்.**

# மரகதலிங்கம்

## 1



'சிவன்குடி மரகதலிங்கம் மிக விசேஷமானது. புராணப்படி இந்திரனே அந்த மரகத லிங்கத்தைச் செய்து சிவன்குடி ஆலயத்தில் வைத்து வழிபட்டானாம். அந்த மரகத லிங்கத்தை - தொடர்ந்து ஒரு மண்டல காலம் உச்சி வேளையின் போது அதன்மேல் சூரியஒளிபடும்போது வணங்கியவர்கள் எல்லோருமே தங்கள் லட்சியத்தில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆனால் இன்று அந்த மரகத லிங்கம்...?'

**சி**வன்குடி!

வழக்கமான ஒரு கிராமமாகவே இல்லை. கிராமம் என்றாலே பச்சை பசேல் என்று வயல்கள், தென்னந் தோப்புகள், மோட்டார்பம்செட் இறைக்கும் கிணறுகள், வைக்கோற் போர்கள், குடிசைகள் என்றுதான் நமக்கு தோன்றும், நூத்துக்கு தொண்ணூறு கிராமங்கள் இன்று இப்படித்தான் இருக்கின்றன.

சிவன்குடி இவற்றில் இருந்து மாறுபட்டிருந்தது. வயலுக்கு வயல் காய்ந்து கிடக்க - எங்கு பார்த்தாலும் புற்று கட்டியிருந்தது. அங்கேயே குடிசைகள். ஆனால், அவ்வளவாக ஜனநடமாட்டமே இல்லை.

ஊரின் நுழைவாயிலில் இடப்பக்கமாக ஒரு பனைமர உயரத்திற்கு கரடு ஒன்று. அதன்மேல் இருந்து சிவன்குடியைத் துல்லியமாகப் பார்க்க முடிந்தது. சிறிய ஊர்தான். ஆனால் ஒரு காலத்தில் பெரிய ஊராக இருந்திருக்க வேண்டும் என்பதுபோல் அங்கங்கே கட்டடங்கள் இருந்த தடயங்கள், கிணறுகளை எல்லாம் மண்மூடியிருந்தது. அந்த கிணறுகள் இருந்த இடத்தில் மட்டும் அடர்த்தியாக புதர். ஆவாரையும் அந்தி மந்தாரையும் அங்கே போட்டி போட்டு வளர்ந்திருந்தன. ஊருக்கு நடுவில் சிவன்குடி மரகதலிங்கேஸ்வரர் திருக்கோயில். ஊரிலேயே உயரமான ஒரு கட்டடமாக அதன் கோபுரம் மட்டும் இருந்தது. அதுவும் தூர்ந்து போய் கருத்து அரசஞ்செடிகளுக்கு இடம் கொடுத்திருந்தது.

மினிபஸ் வந்து போவதற்கு தோதாக ஒரு மண்பாதை. கரட்டுமேல் இருந்து பார்த்தபோது ஒரு மஞ்சள் தகரப் பெட்டிபோல மினி பஸ்ஸும் மெல்லிய புழுதிப் படலத்துக்கு நடுவே வந்தபடி இருந்தது.

பஸ்ஸில் அவ்வளவாக கூட்டம் இல்லை,

சிவன்குடியில் யார் இருக்கிறார்கள்?

டிரைவர்கூட ஏதோ பேருக்கு ஓட்டி வந்தபடி இருந்தான். பஸ்ஸும் ஊரின் துவக்கத்தில் உள்ள ஒரு ஹிப்பியின் தலையைப் போன்ற புளிய மரத்தை ஒட்டி நின்றது. உள்ளே இருந்து நவநாகரீக இளைஞன் ஒருவன் இறங்கினான். அவன் கையில் ஒரு பெரிய - மேல்நாட்டு சக்கரங்கள் பொருத்திய சூட்கேஸ் அந்த நாளைய காந்தி கண்ணாடியை இந்த நாளைய ஸ்டைலாகக் கருதி அணிந்தான். ஆனால் அழகான கிராப் தலை அவனுக்கு, அவன் தோற்றத்துக்குத் துளியும் சம்பந்தமே இல்லாதபடி நெற்றியில் நிறைய விபூதி பூசியிருந்தான்.

அவனை உதிர்த்த பிறகு பஸ் புறப்பட்டுவிட்டது.



கண்டக்டர் மட்டும் அவனை ஆச்சர்யத்தோடு பார்த்துக் கொண்டே போனான்.

அந்த இளைஞன் இறங்கிய இடத்திற்கு சற்று தள்ளி நாட்டு ஓடுகளால் வேய்ந்த ஒரு வீடு. வீட்டு முன்னால் ஒரு சிமெண்ட் திண்ணை. திண்ணை மேல் அந்த பட்டப் பகலிலும் யாரோ படுத்திருந்தார்கள்.

மற்றபடி அவனைக் கவனிக்க ஆளே இல்லை. அவனும் மெல்ல அந்த நபரை நோக்கிச் சென்றான். படுத்திருப்பது ஆணா பெண்ணா என்பதில் இருந்து, எது தலைப்பக்கம், எது கால் பக்கம் என்பது வரை ஒரே குழப்பம். "ஹலோ..." - மிருதுவான குரலில் அவன் அழைத்தும் பயனில்லை. இரண்டு மூன்று முறை கூப்பிட்டவன் மெல்ல தொட்டுப் பார்த்தான். நல்லவேளை துணியை விலக்கிக் கொண்டு ஒரு தொண்ணூறு வயது கிழவியின் முகம் பளிச்சிட்டது.

"ஆரு...?"

"பாட்டி... என் பேர் பாண்டியராஜன். நான் சென்னைல இருந்து வர்றேன். இங்க கோவில் குருக்கள் வீடு எங்க இருக்கு?"

- அவன் கேட்டது பாட்டி காதில் விழவே இல்லை. ஆனால் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு இருமலோடு ஒரு ஐம்பது வயதுப் பெரியவர் எட்டிப் பார்த்தார்.

"யார் தம்பி நீங்க?"

"என் பேர் பாண்டியராஜன். சென்னைல இருந்து வந்துருக்கேங்க..."

"இந்த ஊருக்கா?"

- அவர் கேட்ட விதத்தில் ஒரு ஆச்சரிய அதிர்ச்சி.

"ஏன் அப்படி கேக்கறீங்க? இந்த ஊருக்கேதான்..."

"யார் இருக்கார்னு பார்க்க வந்துருக்கீங்க...?"

''குருக்களப் பாக்கணும்னு... அவர் வீடு?''

''அவர் வீடு இப்ப இந்த ஊர்ல இல்லையே...''

''இந்த ஊர்ல இல்லாம...?''

''இங்க இருந்து ஏழு மைல்ல கரம்பனூர்னு ஒரு டவுன் பஞ்சாயத்து இருக்கு. அங்கல்ல இருக்காரு.''

''அவருக்கு இந்த ஊர்ல வீடு இருக்கறதாவும் அங்கதான் அவர் இருப்பார்னுதான் நினைச்சு வந்தேன்.''

''கோவில்ல சாமி இருந்தால்ல அவர் இங்கே இருக்க...?''

- அந்த நபர் அடுத்த குண்டைத் தூக்கிப் போட்டார்.

''சாமி இல்லையா... ஆச்சரியமா இருக்குதே...''

''இந்த ஊர் மாதிரி செழிப்பா ஜேஜேன்னு ஒரு ஊர் இருந்ததும் கிடையாது. அப்படியே மாறி சுடுகாடு மாதிரி மாறின ஒரு ஊரும் கிடையாது. எல்லாம் காலக் கொடுமை...'' - என்றபடி அவர் நெஞ்சுக் கூடு நொறுங்க இருமி முடித்தார். அதன்பின் 'இனி உன்னோடு பேசு வதற்கு ஒன்றும் இல்லை' என்பது போல திரும்பிச் சென்று கதவை அடைத்துக் கொண்டார்.

பாண்டிய ராஜனாகிய அவனுக்கு கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது. அந்தப் பாட்டியும் திரும்பவும் இழுத்து மூடிக் கொண்டாள்.

அவன் அந்த சிமெண்ட் திண்ணையைவிட்டு தெருவுக்கு வந்தான். வாசலில் ஒரு மல்லிகைக் கொடி... முற்றாக கருகிவிட்டிருந்தது. முதல் காரியமாக ஒருவாளி தண்ணீர் பிடித்து வந்து ஊற்ற வேண்டும்போல இருந்தது. தெருவில் வரிசையாக பல நாட்டு ஓடு வேய்ந்த வீடுகள். எல்லா வீட்டுக்குமே திண்ணை இருந்தது.

ஆனால் திண்ணையில்தான் யாருமே இல்லை.

அவனுக்கு தாகமாக இருந்தது.



அண்ணாந்து பார்த்த போது வானில் பதினோரு மணி சூரியன்.

எல்லா வீட்டு வாசலிலும் அகத்தி மரம், மல்லிகைக் கொடி, அவரைக் கொடிகள் வளர்ந்திருந்தது. ஆனால் அவை காய்ந்து சருகாய் தொங்கிக் கொண்டிருந்தன.

அந்தக் கொடிகள் மேல் அங்கங்கே பாம்புச் சட்டைகளும் உரிக்கப்பட்டு கிடந்தன. அதுவே ஒருவித மெல்லிய பயங்கரத்தைத் தோற்றுவித்தது.

ஒரே ஒரு வீட்டில் ஜன்னல் வழியாக பீடிப்புகை வந்தபடி இருந்தது. யாரோ இருக்கிறார்கள்!

பாண்டியராஜனும் அந்த ஜன்னல் முன் தன் பெட்டியை இழுத்துச் சென்றபடி நின்றான்.

உள்ளே பார்த்தான்.

தலைக்கு முட்டாக்கு போட்டுக் கொண்டு அழுகிவிட்ட கையோடு ஒருவர்.

அவர் முகத்தில் மூக்கின் நுனியில் கூட அழுகல்.

பார்க்கவே விகாரம் பிடுங்கித் தின்றது.

ஆனால், அந்த நிலையிலும் வலிந்து புகையை இழுத்து ஊதித் தள்ளிக் கொண்டிருந்தார்.

எட்டிப் பார்த்த பாண்டியராஜனை ஒரு அதிசயத்தைப் பார்ப்பது போல் பார்த்தவர் ''யாரப்பு அது?'' என்றும் கேட்டபடி உள்ளிருந்து வெளியில் வந்தார்.

வெளியே திண்ணை சுவரில் திருவிளையாடல் போஸ்டர் ஒட்டப்பட்டு அதையும், யாரோ கிழித்திருந்தார்கள். ஆனால் திரையிடப்பட்ட தேதியும் வருஷமும் 1986-ஆம் வருஷத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தன.

அப்படியானால் அவ்வளவு வருடங்களாகவே ஊர் ஊராக இல்லை. பாண்டியராஜனும் கவனித்தான்.

''ஐயா...! நான் இந்த ஊர் கோவில் குருக்களைப் பார்க்கலாம்னு வந்தேனுங்க...''

''அப்படியா... அவர் இந்த ஊருக்கே வர்ற தில்லையே...''

''கேள்விப்பட்டேன். ஊரே வெறிச்சோடி கிடக்குதே...''

''ஆமாம் தம்பி... எனக்குத்தான் இன்னும் சாவு வரமாட்டேங்குது. நானும் போய்ட்டேன்னா இந்த ஊர்ல இருக்கறவங்க எண்ணிக்கை ஒத்தப் படைக்கு வந்துடும்...''

- அவர் சொன்னதில் மொத்தம் பத்து பேர்வரை ஊரில் இருப்பது ஊர்ஜிதமானது.

''இந்த ஊர் ரொம்ப பிரபலம்னு கேள்விப்பட்டிருக்கேன். ஆனா இங்க வந்து பார்த்தா...''

''அதெல்லாம் ஒரு காலம். கோவில் நல்லா இருந்தவரைல ஊரும் நல்லா இருந்துச்சு. எப்ப அந்த மரகதலிங்கம் களவு போச்சோ, அப்பவே ஊரை விட்டே லட்சுமியும் போய்ட்டா...''

- அவர் பேச்சோடு பேச்சாக திரும்பவும் பீடியை வலித்தார்.

''நீங்க சொல்றத பார்த்தா அந்த லிங்கத்தாலதான் ஊருக்கே சக்திங்கற மாதிரி தெரியுதே...''

''அதுல என்ன சந்தேகம்... மரகதலிங்க சாமியைக் கும்பிட உச்சிப் போதுக்கு எவ்வளவு தூரத்துக்கு லைன் நிக்கும் தெரியுமா?''

- அவன் அதைக் கேட்டுவிட்டு பெருமூச்சுவிட்டான்.

''ஆமா நீ எதுக்கு குருக்கள பாக்கணும்கறே...?''

''சும்மாதான்...'' - என்றவன் அவரிடமிருந்து விலகத் தொடங்கினான்.



''தம்பி...'' - அவர் தடுத்தார்.

''என்ன?''

''பட்டணத்து புள்ள மாதிரி தெரியறே. சிகரெட் வெச்சிருக்கியா?''

- அவன் உடனே பேண்ட் பாக்கெட்டில் கையை விட்டான். ஒரு முழு பாக்கெட் சிகரெட் அப்படியே தூக்கிக் கொடுத்தான். அந்த பெருசு முகத்தில் சூரியனே வந்து குடியேறியது போல் அவ்வளவு பிரகாசம்.

அப்படியே புழுதி மண்சாலையில் சூட்கேஸை இழுத்துக் கொண்டு கோவிலை நோக்கி நடந்தான்.

**கோ**வில் சுற்றுச் சுவர் அவ்வளவும் காரை உதிர்ந்து உள்ளிருந்த செங்கல் வெளியே தெரிந்தது. அதிலும் பல முட்செடிகள் வேர் பிடித்திருந்தன. உள்ளே பெரிய சுற்றுப் பிராகாரம்! அவ்வளவிலும் ஒரே புதர். அந்த புதர்கள் கோவில் கட்டடத்தின் உயரத்தில் சரிபாதிக்கு தழைத் திருந்தன.

சூட்கேஸை இழுத்துக் கொண்டு நடப்பது சிரமமாக இருந்தது. ஊரில்தான் ஒருவரும் இல்லையே... எனவே மதில் சுவர் ஓரமாக சூட்கேஸை விட்டவன் தன் ஷூ கால்களோடு புதர்களுக்குள் நுழைந்தான். முதன்முதலாக பாதம் வைத்த இடத்திலேயே ஒரு பாம்பு படுத்திருந்து புரண்டு படுத்து ஓடத் தொடங்கியது. அவன் நெஞ்சக்கூடும் ஒருமுறை அதிர்ந்து அடங்கியது. அப்படியே இலை தழையை மிதித்து மிதித்து நடந்தான். மழையே இல்லாத தால் அவ்வளவும் காய்ந்து அவன் ஷூகால்கள் படும்போது சப்தம் ஒருவித சரசரப்போடு கேட்டது.

''சிவன்குடி கோயில்ல, பிரதோஷம் அப்படி அமர்க்களப்படும். கோவிலைச் சுத்தி உள்ள பிராகாரத்துல ஜேஜேன்னு கூட்டம் இருக்கும். எள் போட்டால் விழாது...''

- அவன் காதில் ஒரு குரல் எதிரொலித்து அடங்கியது. இன்று அந்த பிராகார வெளியில் கூட எள்போட்டால் விழாது. ஒரு வித்யாசம்; அன்று மனிதர்கள் அடைந்துகிடந்த இடத்தில் இன்று புதர்கள்.

மனிதர்கள் என்றால் சப்தம் போடுவார்கள். புதர்களுக்கு வாயில்லை. அதனால் ஏராளமான நிசப்தம்.

பாண்டியராஜன் பார்த்துப் பார்த்து நடந்தான். பெரிய கொண்டையோடு ஒரு முழு நீள ஓணான் ஒன்றும் கிரிப்பிள்ளை ஒன்றும் இப்படியும் அப்படியுமாக ஓடிப்போய் அவனை சற்று கிலி கொள்ள வைத்தன.

இருந்தும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டான்.

கோவிலின் பின்புறம் இருந்து நுழைந்திருந்தான். சுற்றிக் கொண்டு முன்வழியாக வந்தான். முன்புறம் ஓரளவு பரவாயில்லை. இருந்தும் நந்தி மண்டபத்தில் மேலே கற்கள் விலகி மண்டபம் எப்பொழுதும் விழலாம் என்பது போல விளங்கியது.

கடந்து ஒரு மரச்சட்டம் பதித்த கதவு!

கதவுக்குள் ஒரு நீளமான முன்வெளி. அதற்கும் அப்பால்தான் கருவறை. கருவறைக்கு வலப்பக்கமாய் நடராஜர் சன்னதி.

அங்கெல்லாமே வெறும் இருளோகமாக இருந்தது. உள்ளே அந்த பட்டப்பகலில் கூட கருவறை சரியாகத் தெரியவில்லை.

சற்று கண்களை கசக்கிக் கொண்டு பார்த்தான். லிங்கத்தின் ஆவுடையார் பகுதி மட்டும் தெரிந்தது. மேலே லிங்கம் உள்ள இடத்தில் ஒரு குழவிக்கல் இருந்தது. அந்த நாளில் மரகத லிங்கம் இருந்த இடம். ஆட்டுக்கல்லை இழுத்துப் போட்டு அதை லிங்கமாக்கியிருந்தார்கள்.



'இந்திரன் பூஜித்த கோவில்... அதற்கா இந்தக் கதி?' அவனுக்குள் ஒரே குழப்பம்.

''யாரது?'' என்று அப்போது ஒரு குரல்.

திரும்பினான். குருக்கள்தான் சைக்கிளில் கோபுர வாசலைக் கடந்து கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்தவனுக்கு 'அப்பாடா' என்று இருந்தது.

சைக்கிளை ஸ்டாண்டுகூட போடாமல் அப்படியே ஒரு ஓரமாய் சாய்த்து நிறுத்திவிட்டு அவர் வந்து கொண்டிருந்தார்.

''யாரது...? இங்க என்ன பண்றேள்? பார்த்தா படிச்ச பிள்ளையாண்டான் மாதிரி தெரியறது. இது என்ன செருப்பு காலோட...''

- அவர் உள்ளே நுழையும் போதே பிலுபிலுவென்று பிடித்துக்கொண்டார்.

பாண்டியராஜனும் வெகுவேகமாக மண்டபத்தை விட்டு வெளியே வந்து செருப்புக் கால்களை உதறினான். அதே வேகத்தில் ''வணக்கம் சாமி. உங்கள பாக்கத்தான் வந்துருக்கேன். என் ஊர் சென்னை. பேர் பாண்டியராஜன்'' என்றான்.

குருக்கள் ஒரு விநாடி அதிர்ந்தார்.

பார்வை 'என்னைப் பார்க்கவா?' என்று கேட்டது.

''என்ன சாமி பாக்கறீங்க... நான் பல வருஷமா அமெரிக்காவுல இருந்தவன். இப்பகூட லீவுலதான் வந்துருக்கேன். எங்கப்பா ஏராளமா சொத்துபத்து வெச்சிருக்காரு. சாகும்போது அவர்தன் விருப்பமா ஒரு விருப்பத்தை எழுதி வெச்சுட்டு இறந்துட்டார்... அதுக்காகத்தான் நான் இங்க வந்துருக்கேன்...''

குருக்கள் அவனை ஆச்சரியத்தோடு பார்ப்பதைத் தொடர்ந்தவர் ''அது என்ன விருப்பம்?'' என்று கேட்டார்.

''ஏதவாது ஒரு இடிஞ்ச சிவாலயத்தைப் புதுப்பிச்சு கட்டிக் கொடுக்கறதுதான்...''

- அவன் சொல்லவும் அவர் கேட்டுவிட்டு சிரித்தார். சிரித்தபடியே இடுப்புச் சாவிக் கொத்தோடு நடந்தவர் மரச் சட்டக் கதவைத் திறந்தவர் ''உள்ற வாங்கோ...'' என்று அழைத்தார்.

அவனும் பணிவோடு உள்ளே நடந்தான்.

வவ்வால் கழிவுகளின் நாற்றம் மூக்கைத் துளைத்தது.

கும்மிருட்டு வேறு... ஆனால் குருக்கள் பழகிய வராதலால் தடங்கலின்றி நடந்து கருவறைக்குள் நுழைந்து அங்கே ஒரு பிறையில் இருந்து தீப்பெட்டியை எடுத்து விளக்கேற்றினார். அம்மிக் குழவியும் ஆட்டுக்கல்லும் லிங்கமாகத் தெரிந்தன. அவனுக்கு கண்களைக் கரித்தது.

''என்ன பாக்கறேள்... இப்போதைக்கு இவர்தான் மரதக லிங்கம். நானும் முடிஞ்சப்ப வந்து விளக்கு போட்டுட்டுப் போறேன். அதுவும் எவ்வளவு நாளைக்கு போடுவேனோ தெரியாது...'' - குருக்கள் குரலில் சன்னமாய் ஒரு அலட்சியம்.

''ரொம்ப பிரபலமான கோவில் இது... இவ்வளவு மோசமாவா போகும்?'' - பாண்டியராஜன்தான் கேட்டான்.

''இது என்ன கேள்வி... கண் எதிர்க்கத்தான் பாக்கறீங் களே. மோசமா போயாச்சு. எப்ப அந்த மரகதலிங்கம் களவு போச்சோ, அப்பவே இந்த ஊரையே தரித்திரம் பிடிக்க ஆரம்பிச்சாச்சு...''

''அந்த மரகதலிங்கத்தை போலீஸால கண்டுபிடிக்க முடியலையா?'

''பிடிப்பா... யாராவது திருடனைப் பிடிச்சு கொண்டு வந்து ஒப்படைச்சா. அப்ப கூட திருடன் காசு கொடுத்தா தப்பிக்க விட்டுறுவா.''



''போலீஸை விடுங்க... இந்த சாமிக்கு ஒரு பக்தர்கூடவா இல்லை? ஆளுக்கு பத்து ரூவா போட்டாகூட போதுமே. இந்தக் கோவிலை ஓரளவாவது சரி பண்ணி இருக்கலாமே...''

''எதுக்கு பத்து ரூபா... லட்ச லட்சமா செலவழிச்சு கட்டவே நிறைய பேர் முன் வந்தா. ஆனா அவாள்ள ஒருத்தர்கூட இப்ப உயிரோடு இல்லை...''

- குருக்கள் கருவறையை விட்டு வெளியே வந்தவராக சொன்னது பாண்டியராஜனை ஒரு அமட்டு அமட்டியது.

''என்ன சாமி சொல்றீங்க?''

''என்ன சொல்றேனா... சாமிக்கு இங்க இருக்க பிரியமில்ல. அதோடு அவர் கோபமும் தணியலை. அதனால் இந்த கோவிலுக்கு யார் வந்தாலும் அவாளை ரொம்பவே சோதிச்சுட்றார்.

உங்களுக்கும் சொல்லிக்கறேன். எச்சரிக்கையா ஊர் போய்சேருங்கோ.

ஏதோ என் தலையெழுத்து - வந்து போயிண்டிருக் கேன். என்னையே அப்பப்ப பாம்புகள் கடிச்சிருக்கு. இருந்தும் விடாம வரேன். நான் வந்து போறதுகூட இங்க உள்ளவங்க பல பேருக்குத் தெரியாது. ஆள் இல்லாத கோவிலுக்கு எதுக்கு விளக்குன்னு கூட தோணும். மனசு கேக்கல. அதான் வரேன்...''

- என்றவர் மரச்சட்ட கதவை இழுத்து திரும்ப பூட்டினார். பூட்டியபடியே-

''எதுக்காக இப்படி பூட்றேன்னு உங்களுக்கு தோணும். பூட்டலேன்னா காட்டு நாய்கள், பூச்சி பொட்டுகள் உள்ள நுழைஞ்சிட்றது. அதனாலதான். மத்தபடி உள்ற என்ன இருக்கு... எடுத்துண்டு போக...?'' -என்றபடியே சைக்கிளை நோக்கி நடந்தார்.

"சாமி..."

"என்ன... சொல்லுங்கோ..."

"நீங்க என்ன சொன்னாலும் சரி சாமி,... நான் இந்த கோவிலை பழைய கோவிலா மாத்தாம விடப்போறதில்ல..." - என்றான் பாண்டியராஜன்.

அவன் குரலில் நல்ல உறுதி. குருக்கள் உடனே நின்று அதிர்ச்சியோடு பார்த்தவராக "உங்களுக்கு பைத்தியம் பிடிச்சிருக்கா...?" - என்றார் சற்று பலமாக.

"கோவில் கட்ட நினைக்கறது பைத்தியமா சாமி."

"நான்தான் சொல்றேனே... அந்த முயற்சியில யாராவது இறங்கினாலே அவாளுக்கு கெடுதல் வந்துட்றதுன்னு..."

"அது எப்படி சாமி... இடிஞ்ச கோவிலைச் சரி செய்யறது புண்ணிய காரியம். அதனால எப்படி கெடுதல் வரும்?"

"இது மரகதலிங்கம் இருந்த ஊர். அதோடு மதிப்பு தெரியுமா உங்களுக்கு?"

"நீங்களே சொல்லுங்க..."

"அது களவு போன காலத்துலையே அதை பத்து பதினைஞ்சு கோடிக்கு மதிச்சா. சுமாரா பத்து கிலோ எடை பச்சை பசேல்னு ஒரு ஒளி. உலகத்துலையே ஒசந்த ஜாதி மரகதத்துல செஞ்ச லிங்கமாம் அது. பாத்தாலே கண்ணுல அனலடிக்கும் அப்படி ஒரு ஜொலிப்பு."

"சரி அதுக்கு என்ன?"

"அது இருந்த கோவில்ல ஒரு சாதாரண கல் விக்கிரகத்தையோ, கல்லால ஆன லிங்கத்தையோ வைக்கறத ஸ்வாமி விரும்பலை."

"அப்ப சாமிதான் இந்த கோவில் இப்படி இருக்க காரணமா?"



"வேற என்னத்த சொல்றது... யார் நல்லது செய்ய முன்வந்தாலும் அவாளுக்கு ஏதாவது கெடுதல் வந்துட்றதே..."

"எனக்கு வராது சாமி..." - பாண்டியராஜன் ஒருவித உறுதியோடு சொன்னான். குருக்கள் கூர்ந்து பார்த்தார். அவன் உடனே சட்டைப் பாக்கெட்டில் இருந்து ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினான்.

அறநிலையத்துறை அதிகாரியிடம் இருந்து வந்த கடிதம். அதில் 'கோவிலை எடுத்து பாண்டியராஜன் புனருத்தாரணம் செய்ய அறநிலையத்துறைக்கு ஆட்சேபம் இல்லை' என்கிற குறிப்பு.

கடிதத்தைப் படித்தவர் ஒரு பெருமூச்சு விட்டார்.

"இந்த கோவில் மட்டுமல்ல... இந்த ஊர்லகூட ஒருத்தரும் இல்ல. இருக்கறவாளும் தீராத வியாதிக்காரா... கவனிச்சிருப்பேள். மரகதலிங்கம் போனதோட எதிர் விளைவு இது. பரம்பரை பரம்பரையா குடி இருந்த நானே கூட அடுத்த ஊருக்கு குடிபோயிட்டேன். இதுதான் யதார்த்தம். இதுக்குமேல நான் சொல்றதுக்கு என்ன இருக்கு?" - குருக்கள் பெருமூச்சுடன் சொல்லி முடித்தவர் சைக்கிளில் ஏறி அமர்ந்தார். போகும்போது கூட "யோசிச்சுக்கோங்கோ..." என்றார். பாண்டியராஜன் பதிலுக்கு தோளைக் குலுக்கிக் கொண்டு ஒரு சிரிப்பு சிரித்தான்.


பின் கழட்டிவிட்ட ஷூக்களை எடுத்து அணிந்து கொண்டு பிராகார வெளியில் பெட்டியை வைத்திருந்த இடம் நோக்கி நடந்தான். பெட்டியும் அங்கேயே இருந்தது. தொட்டுத் தூக்கியவனுக்கு பகீர் என்றது.

பெட்டி புசுக்கென்று இருந்தது.

பதட்டமானவன் மளமளவென்று திறந்தான். திறந்த வேகத்தில் உள்ளிருந்து ஒரு கருநாகம். 'யாரடா என்னை உள்ளே அடைத்தது' என்கிற ஒரு கோபத்தோடு சீறிக் கொண்டு நிமிர்ந்தது.

# 2

லிங்கம் என்ற சொல்லுக்கு இலக்கு என்பது நேர் பொருளாகும். ஆனால் மறைபொருளோ வேறு... லிங்கம் என்பது 'அடங்கி ஒடுங்குவது - பின் பெருகி விரிவது' என்பதே மறைபொருள்.



லிங்கங்களில் இருவிதம் உண்டு. ஒன்று சுயம்பு. இன்னொன்று மானுடர்கள், தேவர்கள் உருவாக்கியவை.

சுயம்பு என்றால் தானாக தோன்றியவை. மற்றவை உருவாக்கப்பட்டவை. இதில் மரகத லிங்கம் நவரத்ன லிங்கங்களின் தொகுப்பில் வருவது. இதை வழிபட்டால் தீராத நோயும் தீரும்.

## 1986

சிவன்குடி பச்சை பொசிந்து கிடந்தது. எங்கு பார் பசுமை. கிணறுகளில் குனிந்து நீர் மொள்ளலாம். அந்த அளவிற்கு நீர் வளம்.

ஊருக்குள் ஒரு அம்பாசிடர் காருக்குள் அமர்ந்தபடியே பிரவேசித்துக் கொண்டிருந்தான் கஜேந்திர பாண்டியன். காரை வேகமாகச் செலுத்த முடியவில்லை. சாலையில் அப்படி ஒரு கூட்டம். டிரைவர் திணறிப் போனான். சாலை ஓரமாக ஏராளமான இட்லிக் கடைகள், டீக்கடைகள் வேறு.



உள்ளிருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்த கஜேந்திர பாண்டியனுக்கு எரிச்சலாக வந்தது.

''எலே... எதுக்குடா இவ்வளவு கூட்டம்? பக்கத்துல எதாவது சினிமாஷூட்டிங் நடக்குதா என்ன?'' - என்று டிரைவரிடம் கேட்டான்.

''இல்லீங்கண்ணே... இந்த கூட்டம் சிவன்குடி கோவிலுக்கு போய்ட்டு வர்ற கூட்டம்ண்ணே...''

''அப்படி என்னடா அந்த கோவில்ல இருக்குது...?''

''என்னண்ணே தெரியாத மாதிரி கேட்டுபுட்டீங்க. எல்லா ஊர்லையும் கல்லுலதானேண்ண லிங்கம் இருக்கும்...?''

''ஆமா...''

''இந்த ஊர் கோவில்ல இருக்கறது மரகத லிங்கம்ண்ணே...''

''மரகத லிங்கம்னா மரகதக் கல்லுலையா ஆனது?''

''ஆமாண்ணே... போய்ப் பாருங்க... பொறவு தெரியும். அதுலையும் உச்சிப் போதுல சாமிய பாக்கணும். கண்ணே கூசிப் போகும்.''

- டிரைவர் சொன்னது நிஜம் என்பது தரிசனத்தின் போது கஜேந்திர பாண்டியனுக்கு விளங்கியது. கஜேந்திர பாண்டியன் ஒன்றும் பக்திமானில்லை. 'சாமியாவது பூதமாவது?' என்று கேட்டு எகத்தாளம் செய்பவன் அவன். இருந்தும் கோவிலுக்குள் கால் வைக்கக் காரணம் அந்த மரகத லிங்கம்.

'உள்ளே சாமியைப் பார்த்து முடித்தவன் வெளியே வந்து ஊர்க்காரர் ஒருவரின் வாயைக் கிண்டத் தொடங்கினான்.

''ஆமா இந்த மரகதலிங்கம் என்ன விலை போகும்?''

''சாமிக்கு விலையாய்யா...? நினைச்சாலே ஆபத்துய்யா. போய் வாயைக் கழுவு.''

"இல்ல சும்மா மதிப்பு தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன்."

"அதெல்லாம் கோடிக்கணக்கு போகும். அதனால தான் இதுவரை இந்த கோவில்ல பதிமூணு தடவை களவு நடந்துருக்குது...

"அப்படியா?"

"என்ன அப்படியா...? நீ வெளியூர்காரனா? உள்ளூர்க் காரங்க கிட்ட கேளு... கதைகதையா சொல்வாங்க..."

- அவர் அப்படிச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். கஜேந்திர பாண்டியனும் விடவில்லை.

உள்ளூர் இட்லிகடை ஒன்றில் போய் உட்கார்ந்தான். வயதான கிழவி ஒருத்தியின் கடை. அவளிடம் வாயைக் கிண்ட ஆரம்பித்தான்.

"ஏன் பாட்டி... உங்க ஊர் சாமிய திருடப் பார்த்தாங்களாமே..."

"ஆமா... அதெல்லாம் பழைய கதை. இப்பதான் போலீசு காவலுக்கு இருக்குதே..."

"எவ்வளவு பேர்காவலுக்கு இருக்காங்க அப்படி..."

"துப்பாக்கியும் கையுமாக ஒரு ஆள்தான்... பகலுக்கு ஒருத்தர், ராத்திரிக்கு ஒருத்தர்..."

"சாமி சக்தி வாஞ்ச சாமின்னு ஊரே வந்து கும்பிடுது. அப்படிப்பட்ட சாமிக்கு தன்னைப் பாதுகாக்கிற சக்தி மட்டும் இல்லையாக்கும்?"

கஜேந்திர பாண்டியனின் கேள்வி கிழவியைக் கொஞ்சம் தைத்துவிட்டது.

"சாமிசக்தி இல்லேன்னு யார் சொன்னது? காவ காக்கிறது அவர் இல்ல அப்பு... அவரைத்தொட்டுத் திருட வந்து அதனால் காலத்துக்கும் ஒருத்தன் பெரும்பாவியாயிட்டா என்ன பண்றதுன்னு தடுக்கத்தான்..."



- கிழவி ஒரு புதிய கோணத்தில் சொன்ன பதில் கஜேந்திரப் பாண்டியனையே சற்று சிந்திக்க வைத்தது.

"அப்ப சாமியை யாராச்சும் தொட்டா.... தொட்ட வனுக்குத்தான் ஆப்பு. சாமிக்கு ஒண்ணும் இல்லேங்கறே..."

"அப்படித்தானே இதுநாள் வரை ஆயிருக்கு. கல்லுல ஆன சாமியா இருந்தாகூட பரவாயில்லை. இது மரகதமாச்சே... சும்மாசுள்ளுன்னு சக்தி பாயும்..."

"அடிங்காத்தீ... மரகதம்னா என்ன நெருப்பா - சுள்ளுன்னு சுட்றதுக்கு...?"

"சிவம்னாலே நெருப்புதான். இந்த கோவில்ல சாமி கும்பிட்றவங்க ஒரு சிட்டிகை விபூதிக்கு மேலே கூட ஒரு சிட்டிகை எடுத்துக்கிட்டு வரமாட்டாங்க... தெரியுமா?"

"ஏன்?"

"சிவன் சொத்து குலநாசம் அப்பு... உள்ளார சண்டிகேஸ்வரசாமின்னு ஒரு சாமி இருக்குதே எதுக்கு?"

"எதுக்கு?"

"சிவன் கோவில்ல இருந்து சிவன் சொத்த யாராச்சும் கொண்டுகிட்டு போவறாங்காளன்னு பாக்கத்தான்... எதுக்கு அந்த சாமி முன்னால் போயி டொப்பு டொப்புன்னு கை தட்றாங்க..."

- அந்த கிழவி சொல்வதெல்லாம் கஜேந்திர பாண்டியனுக்கு புதிய தகவல்களாகத்தான் இருந்தது.

"எதுக்கு?"

"சாமி... நல்லா பாத்துக்கோ. நான் இந்த கோவில்ல இருந்து எதையும், எடுத்துகிட்டு போகலை'ன்னு சொல்லத் தான்..."

"இது என்ன புதுக்கதை... அந்த சாமிக்கு காது கேக்காதுன்னும் அது கண்ணை மூடி தியானத்துல இருக்கற தால

அதுகிட்ட கை தட்டி கவனத்தைத் திருப்பறதுக்கும்னுல்ல சொல்றாங்க.''

''அப்படியும் சொல்லலாம்... ஆனா நான் சொல்றது தான் சத்யம். சிவன் கோவிலுக்கு போறவங்க சிவனுக்கு எதையும் தரத்தான் பாக்கணும். அங்கிருந்து சாம்பலைக்கூட கொண்டுகிட்டு வரக்கூடாது. மீறி கொண்டுகிட்டு வந்தா குடும்பம் விளங்காது.''

- பாட்டி ஒருவழியாக பயமுறுத்தலில் வந்து நின்றாள்.

''அப்ப இங்க களவாணித்தனம் பண்ணவங்கல்லாம் காலாவதியாயிட்டாங்கன்னு சொல்லு.''

''அதை நான் என் வாயால சொல்லணுமாக்கும்... இதே தெருவுல முக்கு திரும்பற இடத்துல ஒருத்தன் படுத்துக்கிடப்பான். அவனைப் போய் பாரு. அப்ப தெரியும்.''

''அவனுக்கு என்ன?''

''கையும் காலும் இழுத்துகிச்சு. இந்த கோவில்ல கொஞ்ச நாள் தர்மகர்த்தாவா இருந்தவன். சாமி காசை அள்ளி அள்ளித் தின்னான். இப்ப வியாதி அவனை அள்ளித் தின்னுகிட்டு இருக்குது...'

- பாட்டி சளைக்காமல் பதில் சொல்லிக் கொண்டே போனாள். கஜேந்திரபாண்டிக்கும் அதற்கு மேல் பாட்டியிடம் பேச எதனாலோ மனதில்லை. மணக்க மணக்க இட்லி தோசையைத் தின்றுவிட்டு காசு கொடுக்கப் போகும்போது பாட்டி கச்சிதமாகச் சொன்னாள்.

''உங்களப் பார்த்தா உள்ளூரா தெரியலை. தோரணையை பார்த்தா சண்டியர் மாதிரி தெரியுது. இம்புட்டு நேரம் பேசினதும் என் வாயைப் புடுங்கறதுக்காகூட இருக்கலாம். எதாச்சும் கெட்ட எண்ணம் இருந்தா மாத்திக்குங்க.''

- பாட்டி சொன்னது நல்ல நடுமண்டையில் குட்டு வைத்த மாதிரி இருந்தது.



அன்று இரவு!

கஜேந்திர பாண்டிக்கு இருப்பே கொள்ளவில்லை. வீட்டு மொட்டை மாடியில் பனியன் வேட்டியில் உலாப் போனபடியே தம் பத்த வைத்துக் கொண்டு புகையை கசக்கியபோது விறுவிறுவென்று வந்து சேர்ந்தான் கோட்டை முத்து.

வந்தவன் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்து முடிக்க கோட்டை முத்துவோடு வந்த அடியாள் மாடிப்படி தொடங்கும் இடத்தில் நின்று கொண்டான். இருட்டில் அய்யனார் கோவில் பரிவார சாமியாட்டமும் தெரிந்தான்.

''வா கோட்டை... உனக்காண்டிதான் காத்துக் கிட்டிருக்கேன்.''

''சிவன்குடி போனியா... சாமிய பார்த்தியா?''

''என்ன கோட்டை... சாமின்னு ஒண்ணு இருந்தால்ல பாக்க. அங்க சிவலிங்கம்ல இருக்குது.''

''நல்லாதான் பேசறே... அதைத்தான் நான் சாமின்னு சொன்னேன்.''

''ஊருக்குதான் அது சாமி. நமக்கு அது பலகோடி. சரிதானே?''

''உன்னால முடியுமா?''

''முடியுமான்னா... இது என்ன கேள்வி? எனக்கு எவ்வளவுன்னு சொல்லு. முடியும் முடியாதுன்னு சொல்றேன்.''

''நீயே சொல்லு...''

''நீ சொல்லு முதல்ல...''

''வேண்டாம் நான் ஒரு தொகை சொல்லி அது குறைவா இருக்குன்னு நீ நினைச்சு நமக்குள்ள பேரம் வேண்டாம்.''

''அப்ப நான் வேற ஒரு கணக்கு போடவா?''

''என்ன?''

''அது என்ன விலைக்கு போகுதோ அதுல பாதிய கொடுத்துடு.''

''கஜேந்திர பாண்டி...''

''என்னா?.. அது ஒண்ணும் பிக்பாக்கெட் சமாசாரமில்ல.

''என்னா?.. அது ஒண்ணும் பிக்பாக்கெட் சமாசாரமில்ல. வெச்சு செய்ய கவனமா திட்டம் போட்டு உசுரை பணயம் வெச்சு செய்ய வேண்டிய வேலை. காவலுக்கு இருக்கற போலீஸை போட்டுத் தள்ளுற கணக்கு வேற இருக்குது. எல்லாத்துக்கும் மேல களவாண்டதுக்கு பொறவு ஒரு அஞ்சு ஆறு வருஷத்துக்கு நான் தமிழ்நாட்லையே இருக்க முடியாது. இங்க என் கட்டபஞ்சாயத்து வரும்படி, கந்துவட்டி வரும்படி, ஆளைக் தூக்கற வரும்படின்னு எம்புட்டு லட்சத்தை நான் விட்டாவணும் தெரியுமா?''

- கஜேந்திர பாண்டிய அழுத்தமாக தன் முடிவைக் கூறிவிட்டான். கோட்டைமுத்து உடனே பதில் சொல்லவில்லை. கீழே போய் ரகசியமாக யார் யாருடனோ போனெல்லாம் பேசிவிட்டு வந்தான். பிறகு கஜேந்திர பாண்டியிடம் வந்தவன்-

''சரிடா நண்பா... காரியத்தை முடி. பெரிய அஞ்ச உனக்கு கூலியாதர்றேன்...'' - என்றான்.

''அப்ப பத்து கோடியா அதோட விலை...?''

''ஆமாம். மொத்த மரகதத்தோட மதிப்பு... அப்புறம் அதோட புராதனம் எல்லாத்துக்கும் கூட்டி கழிச்சு நான் வெச்சிருக்கிற விலை.''

''பார்ட்டி யாரு?''

''லோக்கல் கிடையாது. இது வெளிநாடு.''

''அதுதான் தெரியுமே... அதுல எந்த நாடு...''

''அதெல்லாம் உனக்கு எதுக்கு?''

''அதுக்கு விலை பத்து கோடி தாங்கறத நான் எதை வெச்சு நம்பறது?''



''என்ன கஜேந்திரா... அஞ்சு கோடி ரூவாயா நீ எந்த வருஷத்துல சம்பாரிக்க போறே... பழகிட்டோமேன்னு நான் இறங்கி வந்தா ரொம்பதான் கனம் பாக்கறியே.''

''சரி அட்வான்ஸ் எவ்வளவு?''

''ஒரு பெரிய தொகையைக் கொடுத்துட்றேன்.''

''இரண்டாகொடு. லிங்கத்தை ஒப்படைக்கும்போது சொச்சம் மூணு ரெடியா இருக்கணும்.''

''உம்...''

''என்ன சுரத்தே இல்ல. ரெடியா இருக்கும்னு வார்த்தைல சொல்லு.''

''இல்லாட்டி நீ சரக்கை தந்துடுவியா என்ன?''

''இதோ பார்... உலகமே பயபக்தியோடு கும்பிட்ற சாமியை நான் களவாடப் போறேன். எனக்கு புத்திபலம்தான் பெருசு. பக்தி பலம்தான் பெருசுன்னு அலையறவங்க நடுவுல இம்புட்டு துணிவா இருக்கவே நீ ஒரு தனி சம்பளம் தரலாம்...''

''பக்திக்கு கீழே ஒரு கொம்பு முளைச்சா புத்திங்கறது சரியாதான் இருக்குது. சரி நீ காரியத்தை எப்படி முடிக்கற துன்னு கணக்கு போட்டுக்கோ, மத்த விசயமெல்லாம் நூல் பிடிச்சா மாதிரி நடக்கும்.''

''முதல்ல சிலோன் போறதுக்கு பாஸ்போர்ட் டிக்கெட்டை ரெடி பண்ணிக்கறேன். விமானத்துல ஏறுறதுக்கு கச்சிதமா பத்து மணி நேரம் இருக்கும்போது சிவன் குடி மரகதலிங்க சாமியை எப்படி எடுக்கணுமோ அப்படி எடுத்துடுவேன். சாமி என் கைக்கு வந்ததுல இருந்து அதிகபட்சம் மூணு மணி நேரத்துல பணம் எனக்கு வந்துடணும். சாமி உன்கைக்கு வந்துடும். அப்புறம் சாமி பாடு, உன் பாடு. நான் விமானம் ஏறிடுவேன். போலீஸ் காரங்க துப்பு துலக்கறேன் துப்பு துலக்கறேன்னு காலத்தை ஓட்ட வேண்டியதுதான்...''

- கஜேந்திர பாண்டி தன் திட்டத்தைச் சொல்லி முடிக்க கோட்டை முத்து பதிலுக்கு கைகுலுக்கி கட்டிக் கொண்டான்.

அப்புறமாக கொஞ்சம் தளர்ந்து போய் ஜாலிக்கு மாறத் தொடங்கினார்கள். ஒரு பாட்டில் பிராந்தியை உடைத்து மசால்கடலையோடு ஆளுக்கு பாதியாய் குடித்தார்கள்.

''நம்ம வேட்டையிலேயே பெரிய வேட்டை இதுவாதான் இருக்கும்னு நினைக்கறேன்.''

''பெருசுதான்... பேசாம இத்தோட நிறுத்திகிட்டு கொஞ்சம் பெரிய மனுஷனா வாழ்ந்தா என்னன்னும் தோணுது.''

''ஏன் கஜேந்திரா... உனக்கும் பயம் வந்துடுச்சா.''

''பயமாவது கியமாவது. சம்பாதிக்கறது அனுபவிக்கத் தானே...? அதை உட்டுட்டு இப்படி மொட்ட மாடில தடிப்பசங்கள காவலுக்கு வெச்சுட்டு எப்ப பார் கணக்கு பண்ணிகிட்டே இருக்கவா பொறந்துருக்கோம்...''

''நீ அப்படி வர்றியா?''

''பின்ன...''

''எது எப்படியோ... பக்தர்களை சாமி காப்பாத்துதோ இல்லையோ நம்மை அது நல்லா காப்பாத்துது.''

- கோட்டை முத்து உரக்கச் சொல்லிவிட்டு ஒரு சிரிப்பு சிரித்தான்.

''முட்டாப்பசங்க... முட்டாப்பசங்க...'' - என்றான் கஜேந்திர பாண்டி.

''யாரைச் சொல்றே...?''

''கோவில் கட்னவன், போய் கும்பிட்றவன் அம்புட்டு பேரையும்தான்.''

''அவனுங்கள ஏன் திட்றே... அப்படி கட்டாட்டி நம்ம பொழப்பு எப்படி நடக்கும்?''



''அதுவும் சரிதான்... இருந்தாலும் சில விஷயத்துல நம்ம ஆளுங்கள புரிஞ்சுக்கவே முடியில கோட்டை...''

''எந்த விசயத்துல...''

''ஒரு ஆயிரம் ஐநூறு கடன் கொடுக்கறதுக்குகூட நம்பிக்கை இல்லாம புரோ நோட்ல எழுதி வாங்கிக்கறாங்க. ஆனா பாக்காத சாமியை மட்டும் எதை வெச்சு நம்பறாங்கன்னு தெரியலை.''

''மனுசங்கள விடு... அந்த சாமி விஷயத்துக்குவா. அது கைலதான் எம்புட்டு ஆயுதம். அதுலையும் இந்த சிவனுக்கு நெத்தியில் ஒரு கண்ணு வேற. அப்படித் தொறந்தாலே எதுத்தாப்ல இருக்கறவன் சாம்பலாம். இது இருந்தா சிலையைக் களவாடும்போது வந்து கண்ணைத் தொறக்க வேண்டியது தானே?''

''என்ன கேட்டா பூட்டு, கதவு இதெல்லாம்தான் சாமி. ஏன்னா இதுதான் களவு போகாம அம்புட்டையும் காப்பாத்துது. என்ன சொல்றே நீ...?''

''நீ சொல்றதும் சரிதான். பூட்டும் கதவும்தான் நமக்கு சாமி. நாம அந்த சாமிக்கும் மேலான சாமிங்க.''

''எப்படி?''

''அதையே உடைச்சு நம்ம கைவரிசையை நாம காட்டிட்றோம்ல...''

''ஆ... கரெக்டுப்பா. நாம ஒரு கோவில் கட்டுவோம். அதுல பூட்டு சாமிக்கு ஒரு சன்னதி, சாவி சாமிக்கு ஒரு சன்னதி கட்டுவோம். என்ன சொல்றே?''

''பூட்டேஸ்வரசாமி... சாவியப்பசாமின்னு பேரு வைப்போம். அதுக்கும் கூட்டம் கூட்டமா வந்து

கும்புடுவானுங்க. கவலையே வேண்டாம். உண்டியலும் ரொம்பும்.''

- இருவரும் கொஞ்சம் போதை தலைக்கேற பேச்சில் வரம்புகளை உடைத்துக் கொண்டே போயினர்.

அப்படியே இரவுப் பொழுதும் உருள ஆரம்பித்தது. நல்லவேளையாக விடிவதற்கு முன் கோட்டை சாமியின் அடியாள். போதையில் ஃப்ளாட் ஆகிவிட்ட கோட்டை சாமியைத் தூக்கி தோளில் போட்டுக் கொண்டு வெளியில் நின்று கொண்டிருந்த ஸ்டாண்டர்ட் வேன் ஒன்றில் போட்டுக்கொண்டு வேனையும் கிளப்பிக் கொண்டு மறைந்தான்.

*-*-*



## 3

"லிங்கம் தொடர்பானதில் பூஜிக்க மிக உகந்தது முதலில் வில்வம். பிறகே மற்ற மலர்கள். வில்வம் குளிர்ச்சியூட்டும் குணமுடையது. அதாவது இதை உண்டால் உடலாகிய பஞ்ச பூதம் வெகு எளிதில் அதிக சக்தியைச் செலவழிக்காமல் ஜீரணம் செய்த சக்தியும் சேமிப்பாகும். சிவத்துக்குள் சக்தியை அதிகம் சேமிக்க அல்லது இட்டு நிரப்ப துணை செய்யும் ஒரு மூலிகையாக இது இருப்பதால் இது ஈசார்ச்சனைக்கு மிக உகந்ததாகியது."



சீறிப்பாய்ந்த பாம்பு பாண்டியராஜனை ஒரே போடாக போட்டுவிட்டது. கடிபட்ட அதிர்ச்சியில் கையைப் பார்த்தவனுக்கு பளிச்சென்று அதன் பல் தடயங்கள் தெரிந்தது. உள்ளே பெட்டியில் அவன் வைத்திருந்த துணிமணிகள், கேமரா, கிட்பேக் என்று பல ஐட்டங்கள் இல்லை.

அந்த நேரத்தில் அதை எண்ணிக் கவலைப் படுவதைவிட விஷம். உடம்பில் பரவாமல் பார்த்துக் கொள்வது மிக முக்கியமானதாகவே தோன்றியது. சட்டென்று இடுப்பு பெல்ட்டை அவிழ்த்தவன் கடிபட்ட மணிக்கட்டு பகுதிக்கு மேல் பெல்ட்டை வளைத்துக் கட்டி ஒரு இறுக்கு இறுக்கி ரத்த ஓட்டத்தை முதலில் நிறுத்தப் பார்த்தான். இருந்தும் சித்தம் கொஞ்சம் கிறுகிறுத்தது. அந்த பாம்போ கொத்து போட்ட கையோடு 'என் வேலை முடிந்தது' என்று ஓடிவிட்டது.

பெல்ட்டால் இறுகிய கையுடன் தள்ளாடியபடி கோவில் முன்னால் வந்தவன் அப்படியே சுருண்டு விழுந்தான். மயக்கமும் அவனை ஆக்ரமிக்க விஷமும் பரவ ஆரம்பித்தது.

கண் விழித்தவன் எதிரில் சற்று தொலைவில் குருக்கள் முகம் தெரிந்தது. அவர் தக்ளி கொண்டு நூல் நூற்று பூணூல் தயாரித்துக் கொண்டிருந்தார். பாண்டியராஜன் கண்விழித்து எழுவதைப் பார்த்து திரும்பினார்.

"சாமி..."

"படுங்க... படுங்க. இப்ப நீங்க சிவன்குடில இல்லை. பக்கத்து ஊர்ல என் வீட்ல இருக்கீங்க. உங்களுக்கு ஆயுசு கெட்டி. அதான் கோவிலை விட்டு கிளம்பிட்ட நான் வீட்டு சாவியை மறதியா கர்ப்பகிரகத்துல வெச்சுட்டது தெரிஞ்சு எடுக்கறதுக்காக திரும்பி வந்தேன். வந்தவன் நீங்க சுருண்டு கிடந்ததைப் பார்த்து அதிர்ச்சியாயிட்டேன். உங்க அதிர்ஷடம் உங்களைவிட்டுட்டு பக்கத்து கிராமத்துக்கு போனமினி பஸ் வேற திரும்பி வந்துண்டு இருந்தது. அதனால உங்களை பஸ்ல தூக்கி போட்டுண்டு வந்து எங்க ஊர் விஷக்கடி வைத்தியர்கிட்ட காட்ட முடிஞ்சது. நீங்களும் புத்திசாலித்தனமா பெல்ட்டால் கையை கட்டிண்டது விஷம் பரவாம தடுத்துடுத்து. வைத்தியரும் கையை அறுத்து கருப்பா பாம்பு விஷத்தை வெளிய எடுத்துவிட்டார்."

- குருக்கள் அவன் காப்பாற்றப்பட்ட விதத்தை விளக்கிக் கொண்டே போனார்.

பாண்டியராஜன் பதிலுக்கு நன்றியோடு பார்த்தான்.

"முதல்ல நல்ல நேரத்துல ஊருக்குக் கிளம்பப் பாருங்கோ. நான் சொல்லலை... அது என்னவோ தெரியல - சுவாமிக்கு இன்னும் கோபம் அடங்கவேயில்லை." - என்றார் குருக்கள்.



அவனுக்கு அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது.

"எதுக்கு சிரிச்சேள்?"

"சிரிக்காம என்ன சாமி பண்றது? மனுஷங்க பண்ற தப்புக்கு கொஞ்சம்கூட யோசிக்காம சாமிமேல பழி போட்றீங்களே..."

"மனுஷங்க பண்ற தப்பா...?"

"என்ன கடிச்ச பாம்பு என் பெட்டிக்குள்ள இருந்தது சாமி. பெட்டிக்குள்ள இருந்த துணிமணியெல்லாம் எங்க போச்சுன்னும் தெரியில."

"அப்படியா... நம்பவே முடியலியே."

"நம்புங்கோ... நான் பொழைக்காம போயிருந்தா இந்த உண்மை உங்களுக்குத் தெரியாம போயிருக்கும். நல்ல வேளை நீங்க மறந்த சாவிதான் என்னைக் காப்பாத்தியிருக்கு."

"என்ன இது... குண்டைத் தூக்கி போட்றேளே. சிவன்குடில உங்க பெட்டில இருக்கறத திருடற அளவுக்கு யார் இருக்கா?"

"யாரோ இருக்காங்க சாமி. அவங்களுக்கு என்னை மாதிரி யாரும் வந்து கோவிலை எடுத்துக் கட்றதுல உடன்பாடு இல்லைன்னு நினைக்கறேன்..."

"அப்படியா சொல்றேள்...?"

"வேற எப்படி சொல்ல... பாம்பு எங்க இருந்தாவது வந்து கடிச்சிருந்தாகூட பரவால்ல... என் பெட்டிக்குள்ள இருந்து எப்படி வரமுடியும்?"

"இதை எப்படி எடுத்துக்கறதுன்னு எனக்குத் தெரியலியே..."

"அது சரி... எனக்கு முந்தி கோயில் கட்ட வந்தவங்க யார் யார்? அவங்க எப்படி செத்தாங்கன்னு சொல்ல முடியுமா?"

''நாராயணன் செட்டியார்ன்னு ஒருத்தர், அப்புறமா ராஜாங்கம்னு ஒருத்தர். அவ்வளவு ஏன் சிவன்குடியைச் சேர்ந்த தண்டபாணிங்கற மிராசுதாரே கோவிலை எப்படியாவது சீர்படுத்த ஆசைப்பட்டு - அவர் தலைல மரக்கிளை முறிஞ்சு விழுந்து ஒரு வருஷம் கோமாவுலல்ல இருந்தார்...'

குருக்கள் வரிசைப்படுத்திய பெயர்கள் பாண்டியராஜனுக்குள் அணிவகுக்க ஆரம்பித்தன.

''ஆமா... லட்சக்கணக்குல ஆகுமே... அவ்வளவு பணம் உங்ககிட்ட இருக்கா?''

''இல்லாமலா கிளம்பி வந்துருக்கேன்...''

''உங்களுக்கு சிவன்குடி ஸ்வாமிதான் குல தெய்வமா?''

''இல்ல சாமி... எதாவது ஒரு இடிஞ்ச சிவாலயத்தைக் கட்டணும்கறது அப்பா விருப்பம். அப்பதான் பிரசித்தி பெற்ற இந்தக் கோயிலைப்பற்றி கேள்விப்பட்டேன்.''

''இப்பகூட கெட்டுப் போயிடலை. இதேபோல எவ்வளவே சிவாலயங்கள் இருக்கு. அங்க போய் நீங்க புனருத்தாரணம் பண்ணலாமே...''

''பண்ணலாம்தான். ஆனா இங்க என் பெட்டி திருடு போகாம இருந்திருந்தா - என்னைப் பாம்பு கடிக்காம இருந்திருந்தா நான் ஒருவேளை உங்க பேச்சைக் கேட்டிருப்பேன். ஆனா இப்ப இதை விட்றதா இல்லை.''

''அப்படின்னா...?''

''சிவன்குடி கோவில் புத்துயிர் பெறும். அந்த பழைய நாள் திரும்ப வரும்.''

''நாங்களே நம்பிக்கை இழந்துட்டோம். நீங்க எதை மனசுல வெச்சுண்டு இப்படி சொல்றேள்.''

''போகப் போகப் பாருங்கோ தெரியும்...''



''அப்ப திரும்ப சிவன்குடிக்கு போகப் போறேளா?''

''நிச்சயமா...''

''அதுக்கு முந்தி உங்ககிட்ட ஒரு கேள்வி.''

''என்ன?'' சிவன்குடி மிராசுதார் தண்டபாணிங்கறவர் தலைமேல் மரக்கிளை முறிஞ்சு விழுந்ததா சொன்னீங் களே... அவர் இப்ப எப்படி இருக்கார்...?''

''இருக்கார்... சிவன்குடில முக்காலே மூணு வீசநிலம் அவருக்குத்தான் சொந்தம். கோவில்லயும் அவருக்குத்தான் முதல் மரியாதை. ஆனா இப்ப எல்லாம் இருந்தும் ஒரு பெட்டிக்கடையை வெச்சுத்தான் பொழப்பு நடந்துண்டுருக்கு.''

''அந்த நிலமெல்லாம்...?''

''ஒரு பிரயோஜனமும் இல்லாம கிடக்கு. மழைவேற இல்லை. அதான் பார்த்தேளே... எப்ப மரகதலிங்கம் களவு போச்சோ அப்பவே ஊரைவிட்டு மகாலட்சுமியும் போய்ட்டா...''

''அந்த லிங்கம் என்னாச்சுன்னு யாருக்கும் தெரியலையா?''

''இந்த நிமிஷம் வரை தெரியாது. போலீஸால எதையும் கண்டுபிடிக்க முடியலை. கோவிலும் கொஞ்சம் கொஞ்சமா கீழ போச்சு. இரண்டு கொலை வேற நடந்ததால புனர் பூஜை பண்ணணும்னு பூஜை இல்லாம பூட்டி வெச்சதுல ஆரம்பிச்சது வீழ்ச்சி. சாபம் கொடுத்த மாதிரி ஆயிடுத்து.''

- குருக்கள் சாங்கோபாங்கமாகச் சொல்லும்போது வாசற்புறம் ஒரு ஸ்கூட்டி வந்து நிற்கும் சப்தம்.

மெல்ல எட்டிப் பார்த்தான் பாண்டியராஜன். ஸ்கூட்டியில் இருந்து ஒரு இளம்பெண் இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

''வர்றவ என் பெண் ஐஸ்வர்யா. காலேஜ்ல படிக்கறா. காலேஜுக்குதான் போய்ட்டு வர்றா...''

- அவளும் உள்ளே நுழைந்த கையோடு பாண்டியராஜனை யார் என்பது போல பார்த்தாள்.

''ஐஸ்... சார் பேர் பாண்டியராஜன். நம்ம கோவிலுக்கு வந்த இடத்துல பாம்பு கடிச்சிடுத்து. ஆனா ஆயுசு கெட்டி. தப்பிச்சுட்டார்.''

''அப்படியா...'' என்றபடி ஒரு குறுநகை புரிந்தாள் ஐஸ்வர்யா. வெள்ளை வெளுக்க பரங்கிப்பழமாட்டம் இருந்தாள். வயதுக்கு மீறிய வளர்ச்சி தெரிந்தது. பார்க்கும் விதம். சிரிக்கும் விதத்திலும் நல்ல மெச்சூரிட்டி. அவனுக்கு முதல் பார்வையிலேயே அவள்மேல் ஈர்ப்பு அதிகமானது. அவளோ புக்பேக்குடன் உள்ளே சென்றுவிட்டாள். குருக்களும் ''ரெஸ்ட் எடுங்கோ வந்துட்றேன்'' - என்று சற்று வெளியே சென்றார். குருக்கள் மனைவி உள்ளே சமையல் கட்டில் இருந்தாள்.

ஐஸ்வர்யா முகம் கழுவிக் கொண்டு ஹோம்லியாக சுடிதாரைக் கழட்டிவிட்டு பாவாடை தாவணிக்கு மாறியவளாக அம்மாவிடம் போய் நிற்க கமகமவென்கிற பிராம்மண காபி அவள் முகம் எதிரே நீண்டது.

''தேங்க்ஸ்மா... ஆமா என்னம்மாது... அப்பா இப்படி எல்லாம் யாரையும் கூட்டிண்டு வரமாட்டாரே?'' - என்றாள் மெலிதான குரலில்.

''எனக்கும் அதான் புரியலை. உனக்கு ஒரு விஷயம் தெரியுமோ...?''

''என்ன...''

''அந்த புள்ளையாண்டான் நம்ம சிவன்குடி கோவிலை எடுத்துக் கட்டத்தான் வந்திருக்கான். ஏதோ வேண்டுதலாம்.



அவா தோப்பனார் ஆசையாம். ஆனா நம்ம கோவில் ராசிதான் தெரியுமே. நல்ல பாம்பு தீண்டிடுத்து. ஆனா பாம்பு தானா வந்து தீண்டலை. யாரோ பண்ண சதின்னு சொல்லிண்டிருக்கான் அந்த தம்பி. எனக்கே தலையைச் சுத்தறது.''

- குருக்கள் மனைவி மகளிடம் நடந்ததை சுருக்கமான செய்தியாக வாசித்தபோது ஐஸ்வர்யாவுக்கும் ஆச்சர்யமாகத் தான் இருந்தது.

மளமளவென்று காபியைக் குடித்து முடித்தவள் அவனை நோக்கித்தான் சென்றாள்.

''ஹலோ...''

''ஹலோ...''

''உங்க பேர்...''

''பாண்டியராஜன்.''

''சென்னையா?''

''ஆமா... ஆனா நான் ஸ்டேட்ஸ்ல இருக்கேன்.''

''ஓ...! வெரிகுட். என் பேர் ஐஸ்வர்யா. பி.ஜி.டிப்ளமோ பண்றேன். விஷுவல் கம்யூனிகேஷன் முடிச்சிருக்கேன்.''

''ஃபென்டாஸ்டிக்...''

''உங்கள பாம்பு கடிச்சிட்டதா கேள்விப்பட்டேன். ஈஸ் இட் ட்ரூ?''

''அதுல பொய் சொல்ல என்ன இருக்கு மிஸ் ஐஸ்வர்யா...''

''இல்ல... பாம்பு தானா கடிக்கலை. ஏதோ மனித சதின்னு சொன்னதா...''

''ஆமாம்... என் சூட்கேஸைத் திறந்தப்போ உள்ள இருந்து சீறிப் பாஞ்சு கடிச்சிடிச்சு. உள்ள இருந்த என் திங்ஸையும் காணோம்.''

''ஆர் யூ ஷ்யூர்?''

''ஏன் திரும்பத் திரும்ப இப்படியே கேக்கறீங்க...?''

''காரணமாத்தான்.''

''என்ன காரணம்?''

''கடவுளுக்கு கோபம்; அதுக்கு கோயில்ல பூஜை நடக்கறதுல இஷ்டமில்லை; சிவன்குடியே அழிஞ்சு போகணும்னு ஒரு சாபமிருக்கு அப்படி இப்படின்னுல்லாம் இங்க நிறைய நம்பிக்கைகள். ஆனா நான் ஒருத்தி மட்டும் அதுக்கு எதிரா பேசிவந்தேன்.

இந்த உலகம் மகாமகா பெருசு. சிவன்குடி அதுல ஒரு கொசு அளவுகூட கிடையாது. அங்க இருக்கற ஒரு கோயில் பூஜை நடக்கக் கூடாது. அந்த ஊரும் உருப்படக்கூடாதுன்னு சுவாமி நினைப்பார்ங்கறத என்னால நினைச்சுக்கூட பார்க்க முடியலை.

அந்த கோயில் மரகதலிங்கம் ஒரு பொக்கிஷம். அது மனிதர்களோடு பேராசை குணத்தால திருடப்பட்டது. எல்லா வகைகளையும் இங்க மனிதன்தான் குற்றவாளி. கடவுளுக்கும் இதுக்கும் கடுகளவும் சம்பந்தம் இருக்க வாய்ப்பில்லை.

இன்ஃபாக்ட் நான் ஒரு உண்மையைச் சொன்னா நீங்க அதிர்ச்சியடையக்கூடாது.'' - ஐஸ்வர்யாவின் விஸ்தாரமான பேச்சு பாண்டியராஜனை வாயைப் பிளக்க வைத்திருந்தது.

''அது என்ன உண்மைன்னா ஐடோன்ட் பிலீவ் காட்! அதாவது எனக்கு கடவுள் நம்பிக்கை எல்லாம் கிடையாது. ஆனால், இந்த மனுஷங்க கற்பனையா ஒரு கடவுளை உருவாக்கி ஒருபக்கம் அவரை சுப்ரீம்பவரா சொல்றதும், மறுபக்கம் அவருக்குக் கோபம் அது இதுன்னு சொல்றதும் கொஞ்சம்கூட ஒத்துக்கற விஷயமா தெரியலை. கடவுள் இருக்கார்னே



வெச்சுப்போமே... தான்படைச்ச தன் மக்களைத் தானேவா தாண்டிப்பார்.

நீங்க சிவன்குடியைப் பார்த்தீங்களா?''

''பார்த்தேன் மேடம்...''

''இந்த 'மேடம்' ரொம்ப டூமச்சா இருக்கு. ஐஸ்வர்யான்னே கூப்பிடுங்களேன். நானும் உங்களை பாண்டியராஜன்னு கூப்பிட்றேன். இந்த நிமிஷம் நாம் நண்பர்கள். ஓ.கே.''

- ஐஸ்வர்யா அவனை இன்ப அதிர்வில் புதைத்தாள். அப்படியே வெறித்தான்.

''இப்படி பார்த்தா எப்படி... இத்தனை வருஷத்துல என் கருத்துக்கு சாதகமா சொல்லியிருக்கற ஒரே நபர் நீங்கதான். அதனாலதான் உங்ககிட்ட நான் இவ்வளவு தூரம் பேசிகிட்டிருக்கேன்.''

''ரொம்ப சந்தோஷம் ஐஸ்வர்யா. உங்க வரைல ஒரு விஷயத்துல மட்டும் நான் மாறுபட்றேன்.''

''எந்த விஷயம்?''

''கடவுள் இருக்கார். அவர் சுப்ரீம்பவர்தான். அதுல எனக்கு சந்தேகமெல்லாம் இல்லை. அதுதான்.''

''அதுதான் நீங்க கோவில் கட்றேன்னு வந்ததுலையே தெரிஞ்சிடிச்சே. அது உங்க நம்பிக்கை. அதை நான் விமர்சிக்க விரும்பலை.

ஆனா உங்க கடவுள் ரொம்ப சீப்பா ஒரு ஊரையே ஒண்ணும் இல்லாம பண்ணும்னு நீங்க நம்பறீங்களா...''

''நிச்சயமா இல்லை. இதுக்குப் பின்னால நாம கவனிச்சு பாக்க வேண்டிய விஷயம் நிறைய இருக்கு...''

-பாண்டியராஜன் சொல்லி முடிக்கவும் 'கைகொடுங்க' என்று ஐஸ்வர்யா உற்சாகப்படவும் சரியாக இருந்தது.

''ஐஸ்வர்யா... இப்படி வா...'' - உள்ளிருந்து அம்மாவின் தீனமான குரல்.

''அம்மாவும் ஒரு பஞ்சாங்கம். 'வயசுப் பொண்ணு நீ ஒரு வயசுப் பையனோட என்ன பேச்சு?'ன்னு கேக்கறதுக்குத்தான் கூப்பிட்றாங்க. வந்துட்றேன்...'' என ஐஸ்வர்யா சொல்லிக் கொண்டே உள் ஓடினாள்.

குருக்களும் வெளியே நாடார்கடை வரை போய் மூக்குப் பொடி வாங்கியவராய் அதை சர்ர்ர்... என்று இழுத்தபடியே உள் நுழைந்து கொண்டிருந்தார். பாண்டியராஜன் முகத்தில் ஒரு புது உற்சாகம் தெரிந்தது.

''என்ன சார்... விஷக்கடி உபத்ரவம்லாம் சரியாயிட்ட மாதிரி தெரியறதே...'' - என்று கேள்வியுடன் நாற்காலியில் அமர்ந்தார்.

உள்ளே அவர் மனைவி ஐஸ்வர்யாவிடம் கத்திக் கொண்டிருந்தாள்.

''முந்திரிக்கொட்டைத் தனமா என்னடி பேச்சு வேண்டிக்கிடக்கு. உனக்குத்தான் சாமி - கோயில்னாலே ஆகாதே... அப்றமா எதுக்கு அதைப்பத்தி பேசறே. எனக்குன்னு நீ ஒருத்திதான் இருக்கே. உனக்கும் எதாவது வந்து நாங்க அடிச்சிண்டு அழணுமா?''

- அந்தப் பேச்சே குருக்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதைப் புரியவைத்துவிட்டது. அதேவேளையில் வாயிலில் ஒரு கார். டாக்டர் ஒருவர் இறங்கிக் கொண் டிருந்தார். கையில் மெடிசின் பேக்குடன் உள் நுழைய ஆரம்பித்தார்.

''இங்க யாரையோ பாம்பு கடிச்சிடிச்சாமே?''

- நுழையும்போதே கேள்வி வேறு.

''ஆமாம் இவருக்குத்தான். ஆமா உங்களுக்கு எப்படித் தெரியும்?''



''மினி பஸ்ல வந்த ஒருத்தர் சொல்லித்தான் தெரியும். என்கிட்ட பாம்பு கடிக்கு இஞ்செக்ஷன் இருக்கு. அதான் வந்தேன்.''

''அப்படியா... நீங்க எந்த ஊர்? உங்களை நான் பார்த்ததே இல்லையே...''

''நான் பக்கத்து டவுன்தான்.'' - அந்த டாக்டர் பாண்டியராஜனை நெருங்கி கடிபட்ட இடம் எங்கே என்பது போல பார்த்து கண் இமையை இழுத்தும், நாக்கை நீட்டச் சொல்லியும் பார்க்க ஆரம்பித்துவிட்டார்.

படுவேகம்.

குருக்களுக்கே மிக ஆச்சரியமாகிவிட்டது. ஐஸ்வர்யா வும் வந்தாள். கவனிக்கத் தொடங்கினாள்.

''பாய்சன் இன்னும் கண்ட்ரோல் ஆகலை. எதுக்கும் நான் ஒரு இஞ்செக்ஷன் போட்றேன்.'' - என்றபடியே தன் மெடிசின் பேக்கைத் திறந்தார். உள்ளே சிரிஞ்சில் மருந்தோடு தயாராக ஊசி.

பாண்டியராஜனுக்கு சுருக்கென்றது.

''என்ன டாக்டர்... இந்த மருந்தோட பேர் என்ன?''

- என்று கேட்டான். அவரோ பதில் கூறாமல் ஊசியைக் குத்துவதில் வேகமானார்.

''ஒன் மினிட்... ஐவான்ட்டு நோ... இந்த இஞ்செக்ஷன் பேர் என்ன?'' - பாண்டியராஜன் சற்று கத்தினான்.

''அதெல்லாம் தெரிஞ்சு என்ன பண்ணப் போறீங்க? கையைக் காட்டுங்க.''

''நோ... இது பாய்சனை முறிக்கற மருந்து இல்ல. எனக்கு தெரிஞ்சு எந்த லைஃப் சேவரும் இப்படி பிளாக் கலர்ல கிடையாது...''

"இது புது இன்வென்ஷன் மிஸ்டர்..." - டாக்டர் பதிலோடு ஊசி முனையை அவன் புஜத்தின் அருகே கொண்டு வந்துவிட்டார். அவர் முயற்சியில் ஒரு செயற்கையான வேகம்.

பாண்டியராஜன் படுவேகமாக அந்த ஊசியைத் தட்டிவிட்டான்.

"யூ பிளடி... நானும் ஒரு டாக்டர்டா. உண்மையைச் சொல். யார் நீ?" - என்று அவரைப் பாய்ந்து பிடித்தான். அவர் பாண்டியராஜனைத் தள்ளிவிட்டு ஓடத் தொடங்கினார். ஐஸ்வர்யா முந்திக் கொண்டு வாசல் கதவை அடைத்து தாழிட்டுவிட்டு பதிலுக்கு முறைத்தாள். குருக்களுக்கு என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. டாக்டர் முகமோ வெளிற ஆரம்பித்தது.

*-*-*

22640

ருத்ராட்சம்

4



சிவபிரானுக்கு உகந்தவைகளில் ருத்ராட்சத்திற்கு ஒரு தனியிடம் உண்டு. இது இருக்கும் இடத்தில் அருள் எனப்படும் பாசிடிவ் வேவ்ஸ் கசிந்தபடியே இருக்கும். நேபாளத்தில் குளிர்ந்த சூழலில் உருவாகும் ருத்ராட்சங்களுக்கு 'சிவனின் கண்கள்' என்றும் ஒரு பொருள் உண்டு. அந்த ருத்ராட்சங்கள் ஒரு முகம் இரு முகம் முதல் ஆரஞ்சு பழ சுளைகள் போல பன்னிரண்டு கீற்றுகள் கொண்டு பன்னிரு முகம் கொண்டனவாக வெல்லாம் உள்ளது. ஒவ்வொரு முகத்திற்கு ஒருவித சக்தி ஆகர்ஷணம் உண்டு. ருத்ராட்சம் ஒருவர் கழுத்தில் இருந்தால் அவர்களுக்கு அகால மரணம் நேராது. பெரிய அளவில் திருஷ்டி விழுதல். ஏவல், பில்லி, சூனியங்களில் சிக்குதல் போன்றவை நிகழாது. ருத்ராட்சம் கழுத்தில் இருக்க, தினமும் 'சிவாய நம' எனும் பஞ்சாட்சரத்தை இடைவிடாது ஆயிரத்தெட்டு முறை ஜெபிப்பவர் களுக்கு நாளாவட்டத்தில் சொற்பலிதம் ஏற்படும்.

அன்று அவ்வளவாக கூட்டம் இல்லை. புதன் கிழமையாகப் போய்விட்டது. பிரதோஷம் கிருத்திகை, சங்கடஹர சதுர்த்தி என்ற விசேஷ தினங்களாகவும் இல்லை.

கோட்டைமுத்துவின் ஆட்கள் கோயிலில் நாலா புறமும் பக்தர்கள் போல சுற்றி வந்த வண்ணமிருந்தனர். மரகதலிங்கம்

கருவறையில் அலங்காரமாக காட்சி தந்து கொண்டிருந்தது. குருக்கள் ஒவ்வொரு முறை கற்பூர ஆரத்தி காட்டும்போதும் ஒருவித கரும்பச்சை ஒளி ஏற்பட்டு விலகியது. வாசல் புறத்தில் துப்பாக்கியும் கையுமாக காவலுக்கு இருந்த போலீஸ்காரர் சுறுசுறுப்பாக பாக்கு பொட்டலத்தைப் பிரித்துக் கொண்டிருந்தார்.

கோயில் மதில்களில் அங்கங்கே அந்த நாளைய நாகரி எழுத்துக்களில் கல்வெட்டுகள். ஆர்க்கியாலஜி மாணவன் ஒருவர் மட்டும் மெனக்கெட்டு அந்த எழுத்துக்கள்மேல் வெண்ணிற பொடிபோல் ஒன்றைத் தூவி கல்வெட்டு குவிவுகளில் அந்த பொடி படியவும் எழுத்துக்கள் கண்களுக்கு நன்றாக தெரியவும் அதைப் புகைப்படம் எடுக்கவும் படிக்கவுமாக இருந்தார்.

கோட்டைமுத்துவின் ஆட்களில் ஒருவன் அவனிடம் சென்று விசாரிக்க ஆரம்பித்தான்.

''என்ன தம்பி பண்றீங்க?''

''இந்த கல்வெட்டுல என்ன எழுதியிருக்குதுன்னு பாக்கறேன்.''

''என்ன எழுதியிருக்குது... ஏதோ ஜிலேபிஜிலேபியா இருக்குது. ஒண்ணும் புரியலியே.''

''இது நாகரி எழுத்து. எல்லாருக்கும் தெரியாது.''

''சரி. இதுல அப்படி என்ன போட்டுருக்குது...?''

''இதை அதாவது இந்த கோவிலை இந்திரன் கட்டியிருக்கான். பின்னாளில் இதை சோழ ராஜாக்கள் பாதுகாத்திருக்காங்க...''

''யார் இந்த இந்திரன்...?''

''தேவலோகத்து இந்திரன்.''

''அந்த ஆள் எதுக்கு பூமியில இங்க வந்து கட்டணும்?''



''இந்திரனுக்கு ஒருமுறை உடல்நலமில்லாம போயிருக்கு. அது நிவர்த்தியாக மரகதலிங்கம் பிரதிஷ்டை பண்ணி வழிபாடு செய்திருக்கார்...''

''தேவேந்திரனுக்கே உடம்புக்கு வருதா... இதெல்லாம் நம்பற மாதிரியா இருக்கு?''

''இந்த விஷயத்தை அப்படிப் பார்க்கக் கூடாது. யாரோ ஒரு பணக்காரர் இந்த கோவிலைக் கட்டியிருக்கலாம். அவருக்கு தீராத வியாதி இருந்து மரகதலிங்கத்தை வெச்சு வழிபட்டதால நீங்கியிருக்கலாம். உடனே அவர் எல்லாருக்கும் நல்லது நடக்கணும்னு இந்த கோயிலைக் கட்டி இருக்கலாம். இதைக் கட்டினது ஒரு பணக்காரரா இருக்கற மதிப்பைவிட இந்திரன் கட்டினதுன்னா ஒரு பயபக்தியோட வந்து கும்பிடுவாங்க. அவங்களுக்கும் வியாதி குணமாகும் இல்லையா?''

''உம்... இது கொஞ்சம் ஒத்துக்கற மாதிரி இருக்கு. அப்ப காசுள்ள யாரோ ஒருத்தர் கட்டியிருக்காரு...''

''பின்ன என்ன சாமியேவா வந்து கோயிலைக் கட்டிக்கும்...?''

''ஆமா... வேற என்ன இதுல போட்டிருக்கு...?''

''இந்த ஊர் ஒரு காலத்துல வறண்டு இந்த ஊர் மக்கள் கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்தாங்களாம். ஒரு சித்தர் இந்தப் பக்கம் வந்து மரகதலிங்க கோயில் கட்டி வழிபட்டா ஊர் சுபிட்சமாயிடும்னு சொன்னாராம். அதே மாதிரி கோயில் கட்டின பிறகு ஊர் ரொம்ப செழிப்பாயிடிச்சாம்.''

''அப்ப இந்த மரகதலிங்கம் இல்லாட்டி இந்த ஊருக்கு மதிப்பு போயிடுமா?''

''இந்த கல்வெட்டு படி அப்படித்தான் அர்த்தம் வருது. ஒவ்வொரு ஊருக்கும் வாஸ்து பலம்னு ஒண்ணு இருக்கு. அதுதான் மனுஷனை யோசிக்க வெச்சு அவனை வழிநடத்துது. இந்த ஊர் வரைல சிவ பூஜை நடக்கலைன்னா அதுவும் மரகதலிங்கத்துக்கு பூஜை நடக்கலேன்னா பிரச்சினை இருக்கு.

மரகதலிங்கம்கறது புதன்கிரகத்தைக் குறிக்குது. புதன்தான் கல்வி, கணக்கு வழக்கு, கலை எல்லாத்துக்கும் அதிபதி. மரகதலிங்கம் வடிவத்துல அந்த சக்தி இந்த ஊருக்கு கிடைக்குது. அதோ கோபுர கலசம் இருக்குதே... அது மூலமாதான் பரவுது... அதுவும் டெலிவிஷன் டவர் மாதிரிதான்."

"அப்ப சித்தர்சாமி இந்த ஊருக்கு எது பலவீனம்னு கண்டுபிடிச்சு அதை சரிசெய்துருக்காரு... அப்படித்தானே?"

"அப்படியேதான்..."

"இதுல வேற என்னல்லாம் இருக்கு?"

"இதுவரை இவ்வளவு தகவல்தான் சேகரிச்சிருக்கேன். போகப்போக இன்னும் தெரியவரலாம்."

"இதை எல்லாம் நம்பாட்டி...?"

"அது அவங்கவங்க விருப்பம்..."

"இங்க இருக்கறபடி பார்த்தா சாமியைவிட்டு மரகதத்துக்குதான் மதிப்பு மாதிரி தெரியுதே."

"உண்மைதான். ஆனா வெறும் மரகதக்கல்லை யார் கும்புடுவாங்க. அதுல ஈஸ்வரனைப் பிடிச்சு வெச்சுட்டா அதுவே சிவசக்தி ஆயிடுது இல்லையா?"

"சரி இதை காசுக்கு ஆசைப்பட்டு திருடறாங்களே அவங்களுக்கும் இதால நல்லதுதான்கற மாதிரி இருக்குதே..."

" அப்படி கிடையாது. இந்த ஊருக்கு இதோட வாஸ்து பலத்துக்கு மரகதலிங்கம் உதவியா இருக்கு. இதைத் திருட நினைக்கறவங்களுக்கு அவங்க ஜாதகப்படி நிச்சயம் கெட்ட நேரமாதான் இருக்கும். அவங்க வரைல இந்த சாமி ஒரு நெருப்பாயிடும். யாருக்கு என்ன நடக்கும்னு சொல்ல முடியாது. இது இங்க கல்வெட்டுல இல்லை. என்னோட கருத்து. ஏன்னா தண்ணியும் நெருப்பும் ஆள் பார்த்து குணம் காட்றது கிடையாது. தண்ணிங்கறது நல்லவன் தாகத்தையும் தீர்க்கும். கெட்டவன் தாகத்தையும் தீர்க்கும். அதுக்கு பாரபட்சமெல்லாம் இல்லை.



அப்படித்தான் மரகதலிங்கத்தோட சக்தியும் நீயே எல்லாம்னு கால்ல விழறதுக்கும், நீ எனக்குதான்னு அதுக்கு விலை வைக்கறதுக்கும் நிறைய வித்யாசம் இருக்குது இல்ல..."

- அந்த இளைஞன் தன் மனதில் பட்டதைச் சொல்லிவிட்டு மறுநாள் வந்து பார்த்துக் கொள்ளலாம் என்று கிளம்பிவிட்டான்.

கோட்டை முத்துவின் ஆட்களோ நிறையவே கலங்கிப் போயிருந்தார்கள்.

"எலேய்... இந்த சாமியோட சக்திய அந்தப் பய நமக்கு பொட்டுல அடிச்ச மாதிரி சொல்லிபுட்டான். என்ன செய்யலாம்?"

"என்னத்த செய்ய... நம்ம கோட்டை செய்யாத களவா? கோட்டைக்கு என்ன கேடு வந்துடிச்சி...? கோட்டை எப்பவும் சொல்ற கதைதான் ஞாபகம் வருது. காட்டுக்குள்ள மானா இருந்தா புலிக்குள்ள அடங்க வேண்டியதுதான். எப்பவும் வலுத்தவங்களுக்குதான் காலம். மத்தபடி நல்லது, கெட்டது, பாவம், புண்ணியமெல்லாம் மனுஷன் கண்டுபிடிச்ச விஷயங்க... நீ போட்டு குழப்பிக்காம கிளம்பு."

- இருவரும் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்து புறப்பட்டனர். இருந்தும் அதில் நாட்ராயன் என்பவன் கதவைப் பூட்டும் முன் மரதகலிங்கம் முன் போய் நின்று கன்னத்தில் போட்டுக் கொண்டவனாய் "சாமி... நான் ஒரு தீராத வவுத்து வலிக்காரன்... உன்னால் அது குணமானா போதும்." - என்று மரகதலிங்கத்தைக் கூர்ந்து பார்த்தான். அதேசமயம் அவன் உடலில் இனம்புரியாத மாற்றம். எப்பொழுதும் மாத்திரையில் வலியை அடக்குபவனுக்கு அதன்பின் அன்று முதல் மாத்திரை தேவைப்படவில்லை.

கோட்டை முத்துவைச் சந்தித்து பேசும்போது கூட அவன் பேசவில்லை. இன்னொருவன்தான் பேசினான்.

''கோட்டை... அந்த கோவிலை சாமியெல்லாம் ஒண்ணும் கட்டலை. அங்க விசேஷமே மரகதக்கல்லுக்குத் தான். வெறும் கல்லா இருந்தா வெட்டி எடுத்துக்கிட்டுபோய் பொண்டாட்டி புள்ளைங்களுக்கு நகை பண்ணி போட்றுவாங்கன்னு அதை லிங்கமா ஒருத்தன் செஞ்சு வெச்சுட்டான்.

ஆனா ஒண்ணு... அதை அந்த ஊரைவிட்டு எடுத்துட்டா ஊரே ஒண்ணும் இல்லாம போயிடும்னு தெரியுது. கேட்டா வாஸ்து பலம் அது இதுன்னு அளந்து உட்றாங்க.''

''எலேய்... போட்ட திட்டப்படி கஜேந்திரனால களவாட முடியுமா முடியாதா? அதச் சொல்லுங்கடா. கல்லுக்காக தானேடா நாங்களே அதைக் கடத்தறோம். பலகோடி கொடுக்கறேன்னு சொல்றவன் லிங்கத்துக்கா தர்றான். கல்லுக்குத்தானே?''

''இன்னிக்கு ராத்திரி இறங்குனா முடிச்சுடலாம்ணே.''

''கஜேந்திரபாண்டி முடிவு பண்ணிட்டான். வாட்ச்மேன், போலீஸ்காரன்னு இரண்டு பேர்தான் இருப்பாங்க. குளோரோஃபாம் கொடுத்து பாப்பாங்க. அடங்காட்டி ஒரே போடுதான்...''

கோட்டை முத்து சொல்லிக் கொண்டிருக்கும் போதே போன் வந்தது. கஜேந்திர பாண்டிதான் பேசினான்.

''கோட்டை... ரெடியா இரு... இப்ப மணி 10.30. அதிகபட்சம் 2 மணிக்குள்ள மரகதலிங்கம் உன்கிட்ட வந்துடும். பணத்தோட ரெடியா இரு. எனக்கு காலைல ஒன்பது மணிக்கு ஃப்ளைட்.''

- கஜேந்தர பாண்டியன் போன் முடங்கியது. கோட்டை முத்துவிடம் ஒரு நிமிர்வு.

''கோட்டை... யாரு கஜேந்திரனா?''

''ஆமாம். இரண்டு கோடி பைசலாயிடிச்சு. பயலுக்கு இன்னும் மூணு கோடி வேணுமாம்.''

''பணம் தயாரா இருக்கா...?''



''இளிச்ச வாயன்கூட தரமாட்டான். அவன் லிங்கத்தோட வரட்டும். கோவில்ல அவன் இரண்டு பேரை போட்டுத் தள்ளினா, அவனை இங்க நாம போட்டுத் தள்ளுவோம்.''

''கோட்டை...''

''இதெல்லாம் தாண்டா வியாபாரம். இந்த மாதிரி விஷயத்துல களவாணிங்கள விட்டு வைக்கவும் கூடாது. நாளபின்ன போலீஸ்ல சிக்குனா நம்மளைக் காட்டிக் கொடுத்துப்புடலாம் இல்லியா?''

''கோட்டை...''

''பதறாதே... அமுக்கமா இரு. அஞ்சுகோடியோட ஒண்ணும் கஜேந்திரன் ஃப்ளைட் ஏறப்போவதில்ல. ஏர்போர்ட்ல டின் கட்டிடுவாங்க. இங்கதான் எங்கையாவது பதுக்கி வைப்பான். அப்பப்ப வந்து எடுத்துக்குவான். இதுதான் அவன் திட்டமா இருக்கும்.''

''அப்ப அவனை போட்டுத் தள்ளுனா அந்த இரண்டு கோடிய எப்படி கண்டு பிடிக்கறது...''

''அதைத்தான் அவன் இங்க வரவும் நீ கேட்டு தெரிஞ்சுக்கறே... மூணு கோடிய எங்க எப்படி வெச்சுக்குவேன்னு கேட்டு வாயைக் கொடுத்துப்பாரு?..''

''அதுக்கெல்லாம் மசியறவனா அவன்...''

''கல்லை எறி... விழுந்தா விழட்டும். ஆனா ஒண்ணு இனி ஒரு நயா பைசாகூட அவனுக்கு தரப்போறதில்லை.'' - கோட்டை முத்து சொல்லச் சொல்ல அவர்களில் நாட்ராயன் என்பவனுக்கு மட்டும் என்னவேபோல் ஆனது.

வயிற்றில் சுத்தமாக வலி இல்லை.

அவன் வரையில் சாமிக்கு அபார சக்தி இருப்பதாகத் தோன்றியது. அப்படிப்பட்ட சாமியை வைத்து இப்படி இரண்டு பேர் அடித்துக் கொள்வது அவனை என்னவோ செய்தது.

"எலேய் வயித்துவலி... என்னா உம்முன்னு இருக்குறே?"

"ஒண்ணுமில்ல கோட்டை."

"அப்ப நிறைய இருக்குது. என்னா விஷயம்?"

"அவன் சொல்லமாட்டான். நான் சொல்றேன். கோயிலுக்கு நோட்டம் போடப்போன இடத்துல அங்க சுவத்துல கல்வெட்டுங்க நிறைய இருந்துச்சு. அதை ஒருத்தன் படிச்ச படி எடுத்துக்கிட்டு இருந்தான். அவன் ரொம்பவும் தான் நம்ம நாட்ராயன் மனசைக் கலக்கிப்புட்டான். இந்த நாயியும் போய் சாமியைப் பார்த்து கை எடுத்து கும்பிட்டான். கும்பிட்ட பொறவு வவுத்து வலி சுத்தமா போயிடிச்சாம். இந்த கூத்த என்னன்னு சொல்ல...?"

"அப்படியாடா நாட்ராயா...?"

"ஆமாம் கோட்டை. எனக்கென்னவோ அந்த மரகத லிங்கத்துக்கு ஒரு சக்தி இருக்கற மாதிரிதான் தெரியுது. அது இருக்கற இடம் செழிப்பா இருக்குமுனும் வியாதி அண்டாதுன்னும் நான் கேட்டதெல்லாம் உண்மை. இந் நேரம் நான் நாலு மாத்திரை போட்டுக்கறவன். இன்னிக்கு ஒரு மாத்திரைகூட போடலைன்னா பாத்துக்கயேன்..."

- நாட்ராயன் தன் பக்தியைப் பட்டவர்த்தனமாக்கினான். கோட்டை முத்து முகம் உடனேயே ஒரு மாதிரியாகியது. கோட்டையிடம் பாதுகாப்புக்கென்று ஒரு குத்துவாள் எப்பொழுதும் இடுப்பில் இருக்கும். அதை எடுக்க அவன் கை அந்த பகுதிக்குள் நுழையவும் நாட்ராயன் யூகித்து விட்டான். கோட்டை தன்னைப் போட்டுத் தள்ள தீர்மானித்து விட்டான் என்பதை நொடியில் புரிந்து கொண்டவன் அங்கிருந்து ஓட ஆரம்பித்தான். அசுர வேகம்...

"வேண்டாம் கோட்டை.... விட்ரு..."

"இவன மாதிரி மனசுள்ளவன்லாம் என்கூட இருந்தா நான்லாம் ஒரு முடியைக்கூட புடுங்க முடியாது..."



- என்றபடியே கோட்டை முத்துவும் ஓடினான்.

ஆனால், நாட்ராயன் தப்பிவிட்டான்!

மரகதலிங்கத்தோடு காரில் வந்தபடி இருக்கும் கஜேந்திர பாண்டியனிடம் போய்தான் நின்றான் நாட்ராயன். வியர்க்க விறுவிறுக்க கார் நம்பர் பார்த்து நடுரோட்டில் கை காட்டிய நாட்ராயனைக் காருக்குள் ஏற்றிக் கொண்ட கஜேந்திர பாண்டிக்கு கோட்டை முத்துவின் சதி அவ்வளவும் விளங்கவும் மீசைதுடித்தது.

நாட்ராயனோ காருக்குள் ஒரு துணிக்குள் சுற்றப்பட்டு காலடியில் கிடந்த அந்த லிங்கத்தின் மேல் பார்வையாக இருந்தான்.

"கஜேந்திரபாண்டி... தொடக்கூடாததைத் தொட்டுட்டே. இந்த லிங்கம் பத்தி உனக்கு சரியா தெரியல. இதுக்கு நல்லதைத் தவிர எதையும் செய்யத் தெரியாது. இதைக் கும்பிடப் போய் நான் தப்பினேன். என்னால நீயும் தப்பியிருக்கே. பேசாம இதை எடுத்த இடத்துல வெச்சுரு. இல்ல..."

- நாட்ராயன் உணர்ச்சிவயப்பட்டான்.

"அடப்போலே... இதை எடுக்க ரெண்டு கொலை வேற பண்ணியிருக்கேன். இனி இது என் சொத்து. அந்த கோட்டை முத்து விக்க நினைச்ச பார்ட்டிக்கு நானே விக்கறேன். ரெண்டு கோடியைக் கொடுத்தவன் தேடி வருவான்ல...? அப்ப கவனிச்சுக்கறேன்..."

- என்ற கஜேந்திர பாண்டி துணியை விலக்கிவிட்டு ஓடும் காருக்குள் அந்த லிங்கத்தைப் பார்த்தான். சிகார்லைட்டை பற்ற வைத்து பார்த்ததில் காரின் உள்பாகமே பச்சையாகி ஜொலித்தது.

அங்கே கோட்டை முத்துவோ முதலுக்கே மோசம் வந்துவிட்ட ஆத்திரத்தில் குமுறிக் கொண்டிருந்தான்.

*-*-*

## பாணலிங்கம்

லிங்கங்களில் பாண லிங்கம் என்று ஒரு வகை உண்டு. நாவல் பழம்போல் கறுப்பு, வெள்ளை, கருநீலம், பச்சை என்று பல நிறங்களில் கிடைக்கும்.

பாணலிங்கத்தை வீட்டு பூஜை அறையில் வைத்து தினசரி பாலபிஷேகம் செய்து பின் சந்தனப் பொட்டு வைத்து ஆராதிக்கலாம்.

ஒரு பெரிய சிவலிங்கத்தை அபிஷேகித்து வழிபட்ட அதே அளவு பலனும் நிறைவும் இதனிடமும் நமக்குகிட்டும்.

இது வடக்கில் கங்கை, நர்மதை போன்ற நதிகளில் மட்டும் கிடைக்கும். பாணாசூரன் என்பவன் இப்படி ஒரு லிங்கத்தை வழிபட்டே உய்வு பெற்றான். அதனாலும் பாணலிங்கம் என்று பெயர் வந்ததாகக் கூறுவார்கள்.



பாணாசூரனுக்கு 14 கோடி பாணலிங்கங்களை சதாசிவ மூர்த்தி அருளியதாக புராணம் கூறுகிறது. அவைகளே இன்று நமக்கு கிடைப்பவை. எனவே உங்களிடம் ஒரு பாணலிங்கம் இருந்தால் அதை அந்த ஈசனே தந்தது என்பதுதான் விந்தை!

அந்த டாக்டர் உண்மையில் டாக்டரில்லை!

"நான் ஒரு கம்பவுண்டர். தியாகராஜ முதலாளி சொல்லிதான் இப்படி விஷ ஊசியோட வந்தேன்..." என்று அந்த



நபர் சொன்ன உண்மை குருக்களை அப்படியே ஸ்தம்பிக்க வைத்துவிட்டது.

ஐஸ்வர்யாவும் தியாகராஜ முதலாளி என்கிற அந்த பெயரைக் கேட்டு ஸ்தம்பித்தாள்.

"குருக்களே...! யார் அந்த தியாகராஜ முதலாளி? அவர் எதுக்கு என்னைக் கொல்ல முயற்சிக்கணும்...?"

"எங்க ஊர் மிராசு தண்டபாணிங்கறவரோட பங்காளி இந்த தியாகராஜ முதலாளி..."

"யாரு... கோவில் கட்ட ஆசைப்பட்டு தலைல மரக்கிளை முறிஞ்சு விழுந்ததா சொன்னீங்களே... அவரா...?"

"ஆமாம்... அவரேதான்! இரண்டு பேருக்கும் துளிகூட ஆகாது. சொத்துத் தகராறுல எங்க ஊர் மிராசு தண்டபாணிக்கு சாதகமா தீர்ப்பாயிடுத்து. அப்ப இருந்தே பொருமிண்டு இருந்தார். ஆனா மிராசுதார்மேல இருந்த வருத்தத்துக்காக உங்களை எதுக்கு கொலை பண்ண முயற்சிக்கணும்னு தெரியலியே..."

- குருக்கள் ஒரு மாதிரி புழுங்க - பாண்டியராஜன் அந்த கம்பவுண்டரைத்தான் அடுத்து பார்த்தான்.

"சார்... எனக்கு எதுவும் தெரியாது. அப்பப்ப எனக்கு இந்த மாதிரி எதாவது வேலை கொடுப்பார். அவ்வளவு தான்."

"வேண்டாம் மிஸ்டர்... நான் இங்க உங்ககிட்ட சாதாரணமா என்கொய்ரி பண்றத அட்வான்டேஜா எடுத்துகிட்டா அது உங்களுக்குதான் ஆபத்தா முடியும். போலீசுக்கு போகட்டுமா?"

"ஐயோ சார்... ப்ளீஸ்... என்னை விட்டுறுங்க. எனக்கு எதுவும் தெரியாது. தியாகராஜன் பத்தி நான் சொன்னதுகூட ஒரு அவசரத்துல... இது மட்டும் அவருக்கு தெரிஞ்சா என்னைக்

கொலை கூட பண்ணத் தயங்கமாட்டார். நான் இங்க எதுவும் பேசலை. நீங்களும் எதுவும் கேட்கலை. நான் ஊசிபோட வந்தப்போ நீங்க இங்க இல்லைன்னு நான் சொல்லிக்கறேன். உங்க கால்ல விழறேன். என்னை விட்றுங்க.''

- அந்த கம்பவுண்டர் நிஜமாலுமே காலில் விழுந்தான். ஆனால் பலனில்லை. ஐஸ்வர்யாவின் புத்திசாலித்தனம் இன்ஸ்பெக்டர் ராமன் என்பவரை மஃப்டியில் அவர்கள் வீட்டுக்கே வரவழைத்திருந்தது.

ராமன் என்கௌண்ட்டர் ஸ்பெஷலிஸ்ட்டும்கூட. ராமனைப் பார்த்த நொடி அந்த கம்பவுண்டர் இனி தப்பிக்க வழி இல்லை என்பதை உணர்ந்தவன்போல ''சார்... அப்ரூவர் ஆயிட்றேன் சார்...'' என்றுதான் ஆரம்பித்தான்.

ராமன் வாய்விட்டுச் சிரித்துவிட்டார்.

''உன்பேர்...?'' - ராமன் விசாரிக்கத் தொடங்கினார்.

''கந்தசாமி.''

''தொழில்?''

''மெடிக்கல் ஷாப் வெச்சுருக்கேன். கம்பவுண்டராவும் இருக்கேன்.''

''இங்க விஷ ஊசி போட எதுக்கு வந்தே?''

''தியாகராஜ முதலாளி அனுப்பி வெச்சாரு.''

''காரணம்?''

''சிவன்குடி கோயிலை இவர் எடுத்துக்கட்ட ஆசைப் பட்டார். அப்படி செய்தா அதனால தியாகராஜ முதலாளிக்குதான் பாதிப்பு...''

''எப்படி?''



''தண்டபாணி மிராசுதார் மேல இருக்கற பகை உணர்வுதான் பிரதான காரணம்...''

''என்னய்யா சொல்றே? அவங்க பகைக்கு கோயில் என்னய்யா பண்ணிச்சு?''

''கோயில் நல்லா இருந்தவரை ஊரு நல்லா இருந்திச்சு. தினசரி ஐநூறு பேராவது ஊருக்கு வந்து போனாங்க. கடைங்கள்ள நல்லா வியாபாரமாச்சு. சிவன்குடில முக்காலே மூணு வீசம் நிலம் தண்டாணி மிராசுதாருடையதா இருந்ததால் அந்த நிலத்து மதிப்பும் ஏறிகிட்டே போச்சு. மொத்தத்துல கோயில்ல முதல் மரியாதை, ஊர்லயும் நல்ல சொத்து மதிப்புன்னு கொழிச்சார் தண்டபாணி. எப்ப மரகத லிங்கம் களவு போச்சோ அப்ப பிடிச்சிச்சு கிரகம். கூட்டம் குறைஞ்சு கோயிலுக்கும் யாரும் வராத ஒரு நிலை மரகதலிங்கம் எங்க போச்சுன்னு போலீஸாலையும் கண்டு பிடிக்க முடியலை.

மிராசுதார் தண்டபாணியும் தடுமாற ஆரம்பிச்சார். இதைக் கவனிச்ச தியாகராஜ முதலாளிக்கு ஒரே சந்தோஷம்! மரகதலிங்கம் கிடைக்கக் கூடாதுன்னு ஆசைப்பட்டார். அப்படியே சிவன்குடி கோயில் திரும்ப நிமிர்ந்திடாம இருக்க என்னவெல்லாம் செய்யணுமோ செய்ய ஆரம்பிச்சார்.

கோயில் கட்ட ஆசைப்பட்டவங்க மிரட்டப் பட்டாங்க, அவ்வளவு ஏன் மிராசு தண்டபாணியே கோயிலை எடுத்துக்கட்டி அதைத் தூக்கி நிறுத்தப் பார்த்தப்போ மரக்கிளையை வெட்டி அவர் தலைமேல விழவெச்சு அவரையும் படுத்த படுக்கையாக்கிட்டார்.

வெளியே இருந்து பாக்கறவங்களுக்கும் சிவன் குடிக்கே கஷ்டகாலம் வந்துட்டதாதான் தோணிச்சு. மொத்தத்துல சிவன்குடியே சுடுகாடாகி ஒண்ணுமில்லாம போகணும்கறது தியாகராஜ முதலாளியோட ஆசை. கிட்டத்தட்ட ஊர்

சுடுகாடாவே ஆயிடிச்சு. இந்த நிலைல இந்த பாண்டியராஜன் வெள்ளையும் சொள்ளையுமா வரவும் மினிபஸ் கண்டக்டர் மூலம் தகவல் வந்துச்சு. அதே பஸ்சுல அவர் ஆளுங்க சாமர்த்யமா தீர்த்துக் கட்ட நல்ல பாம்போட போனாங்க. பாம்பும் கடிச்சிடிச்சு. செத்துடுவான்னு நம்பி அவங்க திரும்பிட்டாங்க. ஆனா குருக்கள் காப்பாத்திட்டார். அப்பத்தான் விஷயம் விபரீதமா போய்க்கிட்டிருக்கறது தெரிஞ்சிச்சு. பாம்புக் கடிகளுக்கு மருந்து கொடுக்கற சாக்குல தீர்த்துக்கட்ட சொல்லி என்னை அனுப்பினாரு.

இந்த தம்பி ஆயுசு கெட்டி. டாக்டராகவும் இருந்ததால சந்தேகப்பட்டுச்சி. அதுவும் எனக்கும் வினையா முடிஞ்சிடிச்சு...''

- கம்பவுண்டர் ஒரு பகைக் கணக்கை பிச்சு பிசிறு இல்லாமல் சொல்லி முடித்தான். இன்ஸ்பெக்டர் ராமன் வாயைப் பிளந்துவிட்டிருந்தார்.

''பாவிகளா... பாவிகளா... ஒரு தனிப்பட்ட குடும்பத்து மேல இருந்து வன்மத்துக்காக சுவாமியையே போட்டுப் பாத்துட்டேளேடா...''

- குருக்கள் ஒரே வெடியாக வெடித்தார்.

''இருங்க சாமி. நான் தெரியாமத்தான் கேக்றேன். சாமி முன்னால இவங்கல்லாம் ஒரு ஆளுங்களா... உலகத்தையே படைச்சவருக்கு இந்தப் பயலுகல்லாம் ஒரு தூசு மாதிரி. சக்தியுள்ள அவர் ஏன் சாமி, ஊர் நாசமாப் போகட்டும்னு விட்டாரு. அதுக்கு பதில் சொல்லுங்க...''

- இன்ஸ்பெக்டர் ராமனிடம் இருந்து அப்படி ஒரு கேள்வி வரும் என்று குருக்கள் எதிர்பார்க்கவே இல்லை. ஐஸ்வர்யாவுக்கு அவர் ஒரு பிடி பிடித்துவிட்டதாகவே தோன்றியது.

''சொல்லுங்கப்பா... உம்ம ஸ்வாமி சர்வ சக்தி யுள்ளவர்னா முதல்ல மரகதலிங்கம் களவே போயிருக்கக் கூடாது. அடுத்து



அவ்வளவு பெரிய கோயில் பாழ்பட்டு, ஊரும் ஒண்ணுமில்லாம போகலாமா?

ஒரு ஈ எறும்புக்கு கூட பார்த்துப் பார்த்து படியளக்கறவன் அந்த பரமன்னு சொல்வேளே... சார் கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போறேள்? தன்னோட கோயில், அப்புறமா ஒரு ஊர், போறாததுக்கு இந்த பாண்டியராஜன் மாதிரி பலர் அந்த தியாகராஜனால பாடா பட்ருக்கா. இதை எல்லாம் வேடிக்கை பார்த்துண்டு இருக்கறதுதான் உம்ம ஸ்வாமி வேலையா?

இல்லை ஸ்வாமின்னு ஒருத்தர் இருந்தாதானே காப்பாத்தறதோ இல்லை வேடிக்கை பாக்கறதோ நடக்கும்... எனவே அவர் இல்லவே இல்லைன்னு இப்பவாவது ஒத்துக்கறேளா?''

- ஐஸ்வர்யாவும் இன்ஸ்பெக்டருடன் சேர்ந்து கொண்டாள். அப்படியே பாண்டியராஜனையும் ஒரு பார்வை பார்த்தாள். அவன் அவள் கேள்விகளை மெச்சுவான் என்கிற எதிர்பார்ப்பு அவள் கண்களில் மின்னியது.

ஆனால் அவனோ ''மன்னிக்கணும்... உங்க கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்றேன்...'' என்று சற்று முன்னால் வந்தான்.

இன்ஸ்பெக்டர் ராமனும், ஐஸ்வர்யாவும் லேசாக அதிர்ந்தனர்.

''தெய்வம் நின்னு கொல்லும்னு கேள்விப் பட்டிருப்பீங்க. ஆனா நான் அதை அனுபவிச்சவன்; அனுபவ சிச்சுகிட்டும் இருக்கறவன்'' என்றவன், ''உண்மையிலேயே அந்த ஈஸ்வரன் அலகிலா விளையாட்டு உடையவன்தான். இப்ப நினைச்சாலும் எனக்கு சிலிர்க்குது. அந்த சாமி எதையும் வேடிக்கை பார்க்கலை. பார்க்கவும் அதுக்கு தெரியாதுங்கறதான் என்னோட கருத்து.'' - என்று பீடிகை போட்டவனின் கண்களில்கூட கலக்கம். கண்ணீர்

தளும்பத் தொடங்கியிருந்தது. இன்ஸ்பெக்டர் ராமனும். ஐஸ்வர்யாவும் அவனையே வெறித்தனர் ஆனால், அவனால் சட்டென்று வாயைத் திறந்து பேசமுடியவில்லை. தொண்டையை அடைத்தது. கண்களும் தொடர்ச்சியாக குளம் கட்டிக் கொண்டன. ஒரு மாதிரி தத்தளித்தான். பிறகு ஆசுவாசப் படுத்திக் கொண்டவன் மெல்ல சுவரின் படத்தில் தொங்கிய படி இருக்கும் பார்வதி பரமேஸ்வரன் உருவத்தைப் பார்த்து அப்படியே உணர்ச்சி மிகுதியோடு கைகளைக் கூப்பினான்.

''மிஸ்டர் பாண்டியராஜன்... நீங்க எதையோ சொல்ல நினைக்கிறீங்க. ஆனா உங்களால முடியலை. தயக்கமா இல்ல வேற காரணங்களா?''

''ஒரு காரணமும் இல்ல சார். நெகிழ்வு. நான் சொல்லப் போற விஷயங்களெல்லாம் ஒருபக்கம் இருக்கட்டும். அதுக்கு முந்தி ஒரு விஷயத்த மட்டும் திரும்பவும் சொல்லுகிறேன் சார். நம்ம முன்னோர்கள் உண்மையிலேயே ரொம்ப ரொம்ப பெரியவங்க சார். இன்னிக்கு... இன்னிக்கு செல்ஃபோன் இருக்கு, கார் இருக்கு, பஸ் இருக்கு எவ்வளவோ சௌகர்யம்... ஆனா இது எதுவும் இல்லாத நாள்ளையே அவங்க இந்த பூமியைப் பத்தி புரிஞ்சுகிட்டு நாம நல்லா இருக்கணும்கறதுக்காக நிறைய விஷயங்களை எழுதிவெச்சுட்டு போனதெல்லாம் சாதாரணமில்ல சார்... அவ்வளவும் பொக்கிஷம் சார் பொக்கிஷம்...''

''நீங்க நம்ம விஷயத்துக்கு வாங்க பாண்டியராஜன்.''

''நான் ஒண்ணும் சப் - ஜெக்ட்டைவிட்டு விலகி யெல்லாம் போகலை. பேச வேண்டியதைத்தான் பேசறேன். கடவுள் எப்பவும் தானா முன்வந்து தனக்கு கோயில் கட்டு, தேங்காய் பழம் உடைச்சு வழிபாடு செய்யுன்னுல்லாம் சொல்லலை சார். சொன்னா அது கடவுள் கிடையாது.



நாமதான் அதாவது மனுஷன்தான் தன் ஆத்ம சந்தோஷத்துக்காக கோயில்னு ஒண்ணைக் கண்டுபிடிச்சு அதுல கடவுளை உட்கார்த்தி வெச்சான். கோவிலுக்குள்ள கடவுளை அவன் கூப்பிட்டான். உலகம் முழுக்க கடவுள் இருந்தாலும் வெளிப்பட ஒரு இடம் வேணும் இல்லையா? அதுக்காகத்தான் கோயில்! எங்கையாவது கோயில் இருக்குன்னா அங்க நாகரிகமுள்ள மனுஷங்க வாழறாங்கன்னு அர்த்தம். தங்களுக்கு மேல ஒரு சக்தி இருக்குன்னு நம்பி அதை மதிக்கற மக்கள் அந்த ஊர்ல இருக்காங்கன்னும் அர்த்தம்.

சிவன்குடி கோயிலும் அப்படித்தான்! ஆழமா இருக்கற கிணத்துல நிறை தண்ணியும் பாறையா போய்ட்ட இடத்துல வறட்சியும் இருக்கறது எப்படி இயற்கையான விஷயங்களோ அந்த மாதிரி ஒவ்வொரு ஊருக்கும் அதோட நில அமைப்புக்கும் கூட சில சக்திகள் இருக்கு. அந்த சக்தி மனித குலத்துக்கு பயன்பட்ற சக்தியா இருந்துட்டா பிரச்னையில்லை அதுவே மனித குலத்துக்கு எதிரா போயிட்டா என்ன பண்றது?

சிவன் குடிலயும் மனித வாழ்க்கைக்கு எதிரான சில சக்திகள் இருந்தது. அதை நம்மைப்போல சராசரி மனிதர்களால் தெரிஞ்சுக்க முடியலை. ஆனா காலத்தையும் பொழுதையும் ஊடுருவிப் பார்க்க முடிஞ்ச சில ஞானிகள் இருக்கத்தானே செய்யறாங்க. அவங்கள்ள ஒருத்தர் சிவன்குடி மேம்பட - புதன்கிரகத்தோட சக்தி குறைவா இருக்கறத உணர்ந்து அந்தக் கிரகத்தோட சக்தியை அப்படியே பிரதிபலிக்கற மரகதத்தால் சிவலிங்கம் செய்து அதை ஊர்ல இருக்கறவங்க தினசரி கண்வழி தரிசனம் பண்ணி வழிபட்டா அவர்களுக்கு பாதிப்பு ஏற்படாதுங்கறது கண்டுபிடிச்சு சொன்னார்.

அதோட எதிரொலிதான் மரகதலிங்கம் உள்ள கோயில் அமையக் காரணமானது. ஊரும் சுபிட்சமா இருந்தது. எப்பவும் ஒரு ஊரோட நல்லது கெட்டதுக்கு அந்த ஊர் மக்கள்தான்

காரணமாகறாங்க. தனித்தனியா குடும்பம் குட்டின்னு ஆயிரம் லாப நஷ்டங்களோட வாழ்ந்தாலும் ஊருக்குன்னு சிந்திக்கும்போது எப்படி சிந்திக்கிறாங்கங்கறதுலதான் அந்த ஊரோட நன்மை தீமை இருக்கும். இதை இங்கிலீஷ்ல 'கலெக்டிவ் மைண்டு'ன்னு சொல்வாங்க. சிவன்குடி ஊருக்கும் கலெக்டிவ் மைண்டுன்னு ஒண்ணு இருந்தது. தொடக்கத்துல அது இருந்தவிதம் வேற... போகப் போக அந்த கலெக்டிவ் மைண்ட்ல நிறைய மாற்றங்கள்.

'நம்ம ஊர்தான் பிரபலமான ஊர்...

நாம மட்டும்தான் கொடுத்து வெச்சவங்க...

நம்மகிட்ட எது இல்லை...

நாம தப்பே பண்ணினாலும் எதுவும் ஆகாது."

- இப்படி ஒவ்வொருத்தரும் ஊர் விஷயத்துல நினைக்கப் போக அந்த கலெக்டிவ் மைண்ட் கெட்டுப்போக ஆரம்பிச்சது. அதோட எதிரொலிதான் ஒரு நபர் ஊருக்கே ஆதாரமான மரகதலிங்க சாமியைத் திருட நினைச்சதும்!" - பாண்டியராஜன் சற்று இடைவெளிவிட்டான். எல்லோரிடமும் ஒருவித இறுக்கமான மௌனம்... அவன் தொடர்ந்தான்.

"இதெல்லாம் என்ன உளறல்? சுயநலத்தோடு கொஞ்சம்கூட பயமில்லாம ஒருத்தன் திருடினத்துக்கு ஊர்ல இருக்கறவங்களோடு பொதுப்படையான எண்ணம் நல்லா இல்லைன்னு சொல்றேனே... இது சரியான்னுல்லாம் உங்களுக்குள்ள கேள்விங்க எழலாம்.

சத்யம் பண்ணிச் சொல்றேன்...

மலை மேல நின்னு உரக்கச் சொல்வேன்.

கலெக்டிவ் மைண்ட் எங்க சிறப்பா இருக்கோ அங்கே மழை பொய்க்கற தில்ல... பயிர்வளம் குறையதில்ல... விபரீதங்கள் நடக்கறது இல்ல. இதை எல்லாம் மனசுல



வெச்சுதான் கலெக்டிவ் மைண்டை உருவாக்க தேர்த் திருவிழா, தீபாவளி, பொங்கல்னு பண்டிகைகள் அன்னிக்கு எல்லாரும் ஒண்ணா சேர்ந்து வாழ்த்திக்கறதுன்னு நிறைய அடிப்படைகளை அர்த்தத்தோட பெரியவங்க உருவாக்கி வெச்சாங்க.

முதல்ல ஊருக்கு... அடுத்து நாட்டுக்கு... அதுக்கும் அடுத்து உலகத்துக்குன்னு இதுல பல விஷயங்கள் இருக்கறத யோசிச்சு பார்த்தா உணரலாம். இந்த கலெக்டிவ் மைண்டுங்கறது ஒரு ஊர்ல எப்படிப்பட்ட மக்கள் இருக்காங்க? அவங்கள வழி நடத்தற தலைவர்கள் எப்படி இருக்காங்க? அந்த ஊர்ல இயற்கையெல்லாம் எந்த விதத்துல இருக்கு? இப்படி பல விஷயங்களைப் பொறுத்தது.

கொடைக்கானல்ல இருக்கறவங்களோட கலெக்டிவ் மைண்டுக்கும், சிவகாசி பக்கத்துல தீப்பெட்டி அடுக்கற ஒரு வறண்ட கிராமத்துல இருக்கற மக்களோட கலெக்டிவ் மைண்டுக்கும் நிச்சயம் வித்யாசம் இருக்கும்.

சுருக்கமா சொல்லப்போனா கலெக்டிவ் மைண்டுங்கறது பண்பாடு சார்ந்தது. கலாசாரம் சார்ந்தது. படிப்பு சார்ந்தது. பழக்க வழக்கம் சார்ந்தது. குடி கூத்து திருடுன்னு தீய விஷயங்கள் இருந்தா அதையும் சார்ந்தது.

சிவன்குடியிலையும் இதுல வந்த சிதைவுதான் மரகதலிங்கம் திருடுபோக காரணமா இருந்தது. இருந்தவரை வளமா இருந்த ஊர் இல்லாத நிலைல வாடி வறண்டு போனது.

இதுவே கடவுளுக்கு ஒரு சம்பந்தமும் இல்லை. அவரை இழுத்துவெச்சு கால்ல விழுந்தப்போ அகந்தை நீங்கிவிட எல்லா நல்லதும் நடந்தது. அவரைத் திருடக் கொடுத்துட்டு தடுமாறி நின்னப்போ அதற்கேற்பவே எல்லாம் நடந்தது.

தீயைக் கொண்டு விளக்கையும் ஏத்தலாம். குடிசையையும் எரிக்கலாம். தீமேல ஒரு குற்றமும் கிடையாது. பயன் படுத்தறவன் கைலதான் எல்லாம் இருக்கு.

மரகதலிங்கமும் அப்படித்தான். பயன்படுத்தற வங்களோட எண்ணத்துக்கு ஏற்ப அது பலன் தந்தது. அது களவு போனது... கண்டுபிடிக்கப்படலைங்கற வரைதான் உங்களுக் கெல்லாம் தெரியும். அதேபோல அது இருந்தவரை ஊர் எப்படி இருந்தது. இல்லாதப்ப எப்படி இருந்ததுங்கறதையும் இந்த உலகம் பார்த்துடுச்சி. அது பார்க்காத இன்னொரு பக்கம் - அது களவு போன பிறகு என்ன ஆச்சு? இப்ப அது எங்க இருக்கு? எப்படி இருக்குங்கறதுதான். யாராவது அந்த கேள்வியைக் கேட்டுகிட்டதுண்டா?''

- பாண்டியராஜன் தன் நெடிய விளக்கத்தில் முக்கியமான இடத்தைத் தொட்டு கேள்வியையும் எழுப்பினான். இன்ஸ்பெக்டர் சட்டென்று கூர்மையானார்.

''மிஸ்டர் பாண்டியராஜன்...! நீங்கள் பேசறத பார்த்தா உங்களுக்கு அந்த மரகதலிங்கம் இப்ப எங்க இருக்குங்கறது தெரியும்போல இருக்குதே...?'' - என்றார்.

பாண்டியராஜனிடம் அடப்பமாக ஒரு மௌனம். அது பல டன் பாரம் போல அனைவரையும் அழுத்தியது.

அவன் சிரமும் அதை ஆமோதிப்பது போல அசைந்தது. குருக்கள் அப்படியே விக்கித்துப் போனார்!

*-*-*



6

## பிரசாதம்



இறை அம்சங்களில் வெகுவேகமாக ஓடிவந்து பக்தர்களைக் காப்பவன் பரமன். உலகில் இறைவன் மனிதப் பிறப்பெடுத்து அவதாரமாக நிகழ்ந்த கதைகள் பல உண்டு. ஆனால் நேராக மனித உருவில் ஒருமுறைக்கு பலமுறை வந்த இறை அம்சம் ஈஸ்வர அம்சமே...! இதைச் சொல்வதுதான் திருவிளையாடற் புராணம்!

பாணபத்திரருக்காக வந்து பாட்டுப் பாடியது...

பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டது...

தருமிக்காக பாட்டு எழுதியது...

மார்க்கண்டேயனுக்காக எமனிடமே எதிர் நின்றது!

கண்ணப்பனுக்காக ஓடி வந்தது... என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இப்படிப் பட்ட ஈசன் உலகுக்காக விஷத்தை கண்டத்தில் தாங்கிய வேளைதான் பிரதோஷ வேளை! இவ்வேளையில் செய்யும் இடையறாத சிவநாம ஜபம் விஷம் போன்ற நம் கர்ம வினைகளையெல்லாம் சிவ கண்டத்தில் சேர்ந்து நம்மை அமுதக் கடலில் பிடித்துத் தள்ளும். பிரதோஷ வேளையில் எங்கே இருந்தாலும் மனத்தால் 'நமச்சிவாய' என்று

ஜெபித்தாலே போதும். ஆலயம் செல்ல வேண்டும் என்கிற அவசியங்களெல்லாம்கூட அமைவதைப் பொறுத்ததே!

கஜேந்திர பாண்டியனின் அந்த ரகசிய இருப்பிடத்தில் சாக்கு மூட்டைக்குள் சுருண்டு கிடந்த அந்த மரகதலிங்கத்தை அப்படிப் போட்டு வைத்திருப்பது பெரிய பிழையாக தெரிந்தது நாட்ராயனுக்கு...

''கஜேந்திர பாண்டி... சாமியை இப்படிப் போட்டு வைக்கணுமா? அப்படி வெளிய எடுத்து வெச்சு பூ போட்டு ஒரு விளக்கு பொருத்தி வெச்சா நல்லா இருக்கும்பா...'' - என்றான்.

கஜேந்திர பாண்டியன் முறைத்தான்.

''அட நான் சொல்றத கேள்... இந்த சாமி எங்க இருக்கோ அங்க நல்லதுதான் நடக்கும். உன் வரைல - என் வரைலகூட இது நல்லதுதான் செஞ்சுகிட்டு இருக்கு. யோசிச்சு பார்... இதை நான் கும்பிடப் போய் வவுத்து வலிபோச்சு. அதனாலதான் எனக்கும் கோட்டை முத்துவுக்கும் மன பேதமே வந்துச்சு. அவன் மட்டும் என்னைக் கொல்ல நினைக்கலேன்னா நான் அவன்கிட்ட இருந்து தப்பி ஓடி உன்கிட்ட வந்து சேர்ந்திருப்பேனா...? உனக்குதான் கோட்டை முத்துவோட துரோகம் பத்தித் தெரிய வந்திருக்குமா? யோசிச்சுப் பார்...''

''போடா வெண்ணெய். சும்மா சாமி பூஜைன்னு பூச்சாண்டி காமிச்சே போட்டு வெளுத்துப்பிடுவேன். கறிக்கடைக்காரன் ரத்தத்துக்குப் பயந்தா எப்படி பொழப்பு நடக்காதோ, அப்படித்தான் நாமளும். இது என்வரைல காஸ்ட்லியான ஒரு கல். அம்புட்டுதான். மூடிகிட்டு இரு.''

- கஜேந்திர பாண்டி ஒரே போடாகப் போட்டான்.

''சரி என்னா பண்ணப் போறே?''



''அதான் ஒரே குழப்பமா இருக்கு. காலை சிலோனுக்கு டிக்கெட் ரெடியா இருக்குது. அந்த விஷயம் கோட்டை முத்துவுக்கும் தெரியும். நான் அவன்கிட்ட இந்த சிலையைச் சேர்க்கலைன்னா நான்தான் களவாண்டேன்னு போலீசுக்கு சொல்ல அவன் கொஞ்சம்கூட தயங்க மாட்டான். அப்படியே ஏர்போர்ட்டுக்கும் போலீஸ் போயிடும். மொத்தத்துல யார் களவாண்டாங்கங்கறதே தெரியாம போலீஸ் தவிக்கிறது போய் நான்தான்னு தெரிஞ்சிடும்.''

''அட ஆமால்ல...?''

''என்னியக் கேளு... இந்த மாதிரி நேரத்துல பளிச் சின்னு ஒரு யோசனை சொல்ல துப்பு இருக்குதா உனக்கு?''

''யப்பா... நான் என்ன உங்கள மாதிரி பழம் தின்னு கொட்ட போட்ட கேப் மாரியா... இப்பதான் உங்க லைனுக்கு வந்துருக்கேன். நான் ஒரு அப்ரண்டீசுப்பா...''

''பேச்சவிடு... யோசிச்சு ஒரு யோசனை சொல்லு. இந்த நேரம் சிவன்குடில போலீஸ் குவிஞ்சிருக்கும். கோட்டை முத்துவும் தலையைப் பிச்சுக்கிட்டிருப்பான். இன்னும் கொஞ்சம் நேரத்துல விடிஞ்சிடும். அதுக்குள்ற ஒரு முடிவுக்கு வரணும்.''

''சரிப்பா... உனக்கு இந்த மரகதலிங்கம் வெறும் கல்லு. ஆனா எனக்கு அப்படி இல்ல. நான் இதைக் கும்புட்டு இதுகிட்டையே ஒரு யோசனை கேக்கறேன். இது என்ன சொல்லுதுன்னு பாக்கறேன்.''

'அது சரி... விட்டா கைலாசத்துக்கு போன்போட்டு பரமசிவன்கிட்டையே கூட கேக்கறேன்னு கூட சொல்வே.'' - கஜேந்திரபாண்டி கிண்டலை நாட்ராயன் பொருட் படுத்தவே யில்லை. சாக்குப் பைக்குள் இருந்த மரகத லிங்கத்தை மளமளவென்று வெளியில் எடுத்தான்.

"அய்யருங்க மட்டுமே தொட்டுத் தொட்டு கும்பிட்ட சாமி நீ... இன்னிக்கு இந்த கொலைகாரன் கையும் உன்மேல பட்டுருச்சு. நான் கொடுத்த வெச்சவனா, இல்ல நீதான் பாவம் செஞ்சியான்னு தெரியில. எது எப்படியோ... ஆட்டி வெச்சா ஆடித்தான் தீரணும்னு பெரியவங்க சொல்ல கேட்ருக்கேன். இது நிஜம்னா இப்ப உன்னைத் தொட்டு தூக்கிட்டு வந்ததுக்கு காரணமும் நீதான். நீயே சொல்லு... அடுத்து நாம என்ன செய்யணும்னு."

-நாட்ராயன் ஏதோ ஈஸ்வரனே அருகில் அமர்ந்திருக்கற மாதிரி பாவித்து கை கூப்பிக் கொண்டு பேசுவது கஜேந்திர பாண்டிக்கு சிரிப்பை வரவழைத்தது. அப்பொழுது 'ஸ்ஸ்ஸ்' என்று ஒரு சப்தம். திரும்பினால் அந்த ரகசிய இருப்பிடத்தில் கிடக்கும் தட்டுமுட்டுச் சமான்களுக்கு நடுவில் ஒரு நல்ல பாம்பு.

"ஏ பாம்புப்பா..." என்று கஜேந்திரபாண்டி சுதாரிக்க, நாட்ராயனும் விதிர்விதிர்க்க, அந்த பாம்பு மெல்ல ஊர்ந்து மரகத லிங்கம் அருகில் வந்தது. இருவரும் சில அடி தள்ளி நின்றுகொள்ள அப்படியே மரகதலிங்கத்தின் மேல் ஏறி அதை அப்படியே தழுவிக் கொண்டு லிங்கத்துக்கு மேலாக படம் விரித்துக் குடைபோல மூடியது.

காணக்கிடைக்காத காட்சி.

"கஜேந்திரா.... பார்த்தியா? கன்னத்துல போட்டுக்க... கன்னத்துல போட்டுக்க..." என்றான் நாட்ராயன். கஜேந்திரன் பாண்டியனிடம் முதல் தடவையாக ஒரு சின்ன தடுமாற்றம். 'இது தற்செயலான ஒரு சம்பவமா... இல்லை தெய்வாதீனமா?' என்று...

அந்த சர்ப்பம் சில நொடிகள்தான் அப்படி இருந்தது. அப்படியே அது லிங்கத்தைவிட்டு விலகி பக்கத்தில் சரிந்து இறங்கி எங்கோ போகவும் தீப்பந்தத்தைக் கையில்



பிடித்துக்கொண்டு நாட்ராயன் அதையே பார்த்தான். அது பக்கத்து ஜன்னலில் ஏறி வெளியேறியது. நாட்ராயனும் தீப்பந்தத்துடன் ஜன்னல் அருகே சென்று பார்த்தான். பின்னால் ஒரு ஆள் உயர பாம்புப் புற்று.

"கஜேந்திரா... பின்னால் பாம்புப் புத்துப்பா..."

"தெரியும் புத்துக்குள்ளே போயிடிச்சு."

"பின்ன அது என்ன லாட்ஜ்ல ரூம் புக் பண்ணவா போகும்."

"அப்படி இல்லப்பா... அது ஏதோ சொல்லாம சொல்லுது."

"என்னன்னு நீ தெளிவா சொல்லு."

"இந்த லிங்கத்தையும் நீ புத்துக்குள்ள வை. நான் பாத்துக்கறேன்னு சொல்லுது."

- நாட்ராயன் சொன்னது கஜேந்திர பாண்டியன் வரையில் மின்னல் போல இறங்கி வேலை செய்தது.

"அங்க லிங்கத்தை வெச்சுட்டு..."

"உடனேயே கோட்டை முத்துக்கு போன் போடு. 'உன் கொலை கார புத்தி தெரிஞ்சுதான் நான் லிங்கத்தோட உன்ன பார்க்க வரலை. போலீசுக்கு போவாம பொறுமையா இருந்தா, செய்ய இருந்த தப்புக்கு வருத்தப்பட்டா லிங்கத்தோட வந்து பாக்கறேன். பேசுனபடி வியாபாரம் நடக்கும்'னு சொல்லு...

- நாட்ராயன் ஏதோ அருள்வாக்கு சொல்பவன்போல சொல்லச் சொல்ல கஜேந்திர பாண்டியனுக்கு ஒருவழி கிடைத்துவிட்டது போல ஒரு தெம்பு.

அடுத்த நொடியே அந்த ராத்திரியில் போன் போட ஓடினான்.

விடிந்துவிட்டது.

சிவன்குடி கோயிலைச் சுற்றி அப்படி ஒரு கூட்டம். (இப்பொழுது போல செல்ஃபோன் அறிமுகமாகாத காலம். டி.வி.யும் அதிகம் பரவியராத காலம்.) நாளிதழ் நிருபர்கள் கேமராவும் கையுமாக வந்து குவிந்திருந்தனர்.

தர்மகர்த்தா தண்டபாணி கையைப் பிசைந்து கொண்டிருந்தார். காவலுக்கு இருந்த போலீஸ்காரரும் வாட்ச் மேனும் ஆளுக்கொரு மூலையில் தலையில் தாக்கப்பட்டு ரத்த சகதியாகக் கிடந்தார்கள். உடம்பில் உயிர் இல்லை.

மரகத லிங்கம் இருந்த கருவறை கதவு கடப்பாரை யால் நெம்பி பெயர்க்கப்பட்டிருந்தது. அதுவரை வந்த மோப்ப நாய் கோவிலைச் சுற்றிச் சுற்றி ஓடியது.

பிறகு வடக்கு வாசல் வழியாக ஊருக்கு வெளியே வயல்வெளியில் ஓடி காட்டாறு ஒன்றின் கரையில் நின்றது.

போலீசுக்குப் புரிந்துவிட்டது.

காட்டாற்றுக்கு அப்பால் திருடன் வாகனம் கொண்டு தப்பியிருக்கலாம். நாயைத் தூக்கிக் கொண்டு மறுகரைக்கு போனபோது அது தொடர்ந்து ஓடாமல் ஒரு இடத்தில் போய் படுத்துக் கொண்டது.

அந்த இடத்தில்தான் ஏதோ இருக்கிறது என்று தோண்டிப் பார்த்தவர்களுக்கு கொலைகாரனின் உடுப்பு ரத்த சகதியாக கிடைத்தது. ஆனால் அதில சலவைக் குறியோ, டெய்லரின் எம்பளமோ எதுவுமே இல்லை.

போலீஸ் நாய் இப்படி ஆற்றங்கரை வரை ஓடிய தகவல் பேப்பர் மூலமாக கஜேந்திர பாண்டியனையும் எட்டியது.

சிரித்துக் கொண்டான்.

"நம்ம எடுபிடியைச் சும்மா இந்தப் பக்கம் போடான்னு ஓட விட்டேன். சரக்கோட ஓடுன நான் எந்தப் பக்கம் ஓடுனேன்னு போலீஸ் நாய்க்குக்கூட தெரியில பார்." என்று சிரித்தான்.



அருகிலேயே நாட்ராயன். பழைய நாட்ராயனாக இல்லாமல் அவன் முகத்தில் ஒரு தெளிவு. கோட்டை முத்து சொல்லாத வரை நானே போய் போலீஸ் எதிர்க்க நின்னாலும் போலீஸ் என்னை எதுவும் செய்யாது." - என்று திரும்பவும் எகத்தாளம் பேசியவன்-

"கோட்டை மூணு கோடிய கொடுத்துட்றேன்னு சொல்லிட்டான். பணத்தோட இங்க வான்னேன். நம்ம இடம்தான் நமக்கு பலம். என்ன சொல்றே?" - என்றான். மரகதலிங்கமோ அந்த இருண்ட அறையில் சூரிய ஒளியை வாங்கிக்கொண்டு பச்சை விளக்காய் ஜொலித்துக் கொண்டிருந்தது.

"இந்த லிங்கத்துகிட்ட என்னமோ ஒரு சக்தி இருக்கத்தான் செய்யுது..." என்றபடி ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டான். புகையைச் சொரிந்த படியே லிங்கம் அருகில் எல்லாம் சென்றான்.

"வேண்டாம் கஜேந்திரா. சாம்பிராணி போட வேண்டிய சாமிக்கு சிகரெட் புகையைப் போடாதே."

"அட போடா வெண்ணெய். எல்லா புகையும் ஒண்ணுதாண்டா சாமிக்கு." என்றவன் திரும்பவும் இழுத்து புகையைவிட்டான்.

நாட்ராயனுக்கு உடம்பில் நரநரவென்று எறும்புகள் ஊர்கிற மாதிரி இருந்தது.

கோட்டை முத்து வரும் வரை இப்படியே தான் பொழுதைக் கழிக்க வேண்டும். கோட்டை முத்துவும் வில்லங்கமில்லாமல் பணத்தோடு வந்து லிங்கத்தைப் பெற்றுக்கொள்வானா என்பதில் ஒரு நம்பிக்கை தெரியவில்லை.

கஜேந்திர பாண்டியும் துப்பாக்கியில் தோட்டாவை நிரப்பிக் கொண்டு வெளிப்படையாகவே தயாராக இருந்தான்.

"ஹூம்... இப்படியும் ஒரு வியாபாரம்."

"களவாணிப் பசங்க வியாபாரமெல்லாம் இப்படித்தான்... எதுக்கும் தயாரா இரு..."

"அதான் துப்பாக்கியோட இருக்கேனே..."

"சரி தெரியாமத்தான் கேக்கறேன். ஒரு பத்து பேரோட வந்து சுத்தி வளைச்சா என்ன பண்ணுவே?"

"வேடிக்கை பார். லிங்கம் கைக்கு போகாம கோட்டை எதுவும் பண்ணமாட்டான். அது இருக்கற இடம் தெரியணும்னா பணத்தைத்தான்னு சொல்வேன்..." - என்ற கஜேந்திர பாண்டியன் அந்த மரகதலிங்கத்தைத் தொட்டு எடுத்தவன் நேராக பாம்புப் புற்று அருகே சென்று மேல் கூம்பை தட்டிவிட்டான். லிங்கம் நுழையுமளவு வாய் திறக்கவும் அதற்குள் சொத்தென்று போட்டான். அப்படியே சிரித்தபடி வந்தவன் "இப்ப இந்த லிங்கம் இருக்கற இடம் உனக்கும் எனக்கும்தான் தெரியும். எப்பவும் ஒரு ரகசியம் இரண்டு பேருக்கெல்லாம் தெரியக்கூடாது. ஆகையால்..." - சொன்னபடியே துப்பாக்கியை நாட்ராயனை நோக்கி நீட்டினான். நாட்ராயனுக்கு சப்தநாடியும் நடுங்கியது. ஆனாலும் பயனில்லை. கஜேந்திர பாண்டியின் துப்பாக்கித் தோட்டா நாட்ராயனின் காதுக்கு கீழே துளைத்துக் கொண்டு பறந்ததில் நாட்ராயனும் அப்படியே சுருண்டு விழுந்தான். அவன் விழுந்த அடுத்த நொடியே கஜேந்திர பாண்டியும் விழுந்ததுதான் ஆச்சரியம். கஜேந்திர பாண்டியன் காலடியில் அவனால் மிதிக்கப்பட்ட நிலையில் கருநாகம் ஒன்று!

கோட்டை முத்து தன் கூட்டத்தோடு வந்து பார்த்த போது விளங்கிவிட்டது.

"டேய்... நாம வர்றதுக்குள்ள இங்க இவனுங்க ரெண்டு பேத்துக்குள்ள ஏதோ லடாய். இந்த நாட்ராய நாயை கஜேந்திரன் சுட்டுருக்கான். கைல பார் துப்பாக்கி. அதேசமயம் அவனை பாம்பு கடிச்சிருக்கு..."



"கோட்டை... மரகதலிங்கம் எங்கன்னு தெரியலியே."

"சரியான மாயலிங்கமா இருக்குதே... இங்க பூரா தேடி பாருங்கடா..." - என்று அந்த இடத்தையே கவிழ்த்துப் போட்டு அலசியும் பலனில்லை. பாம்புப் புற்றுக்கு மேல் இருந்து ஒரு பாம்பு மட்டும் படம் விரித்துக் கொண்டு பார்த்துக் கொண்டே இருந்தது.

"கோட்டை... உன் இரண்டு கோடி டுமீல் ஆனதுதான் மிச்சம். என்ன பண்ணப் போறே?"

"என்னத்த பண்ண... இன்னொரு பெரிய களவுல இந்த நட்டத்தை சரி செஞ்சுக்க வேண்டியதுதான்."

"இவனுங்கள என்ன பண்ண... போலீசுக்கு செல்லவா?"

"வேண்டாம். இப்படி ஒரு இடம் இருக்கறது போலீசுக்கு தெரிஞ்சுடும். இனி இது நம்ம இடம். இவனுங்களத் தூக்கிட்டு போய் பெட்ரோலை ஊத்திக் கொளுத்திப்புடுங்க."

"இரண்டு கோடி போனதுக்கு ரகசிய இடம்தான் மிச்சமா...?"

"அதுதான் இப்ப தலை எழுத்து..."

- ஒரு வழியாக கோட்டை முத்து பெருமூச்சோடு சமாதானம் ஆனான்.

**கா**லம் ஓட ஆரம்பித்தது.

கோட்டைக்கு ஒரு பையன்!

அவனுக்கு தன்னுடைய கேடு கெட்ட தொழில் பத்தி எதுவுமே தெரியாதபடி கொடைக்கானல் ஊட்டி என்று ஹாஸ்டலில் தங்க வைத்தே படிக்க வைத்தான். அவனும் நன்றாகப் படித்தான். மேல் படிப்புக்கு அமெரிக்காவுக்கெல்லாம் அனுப்பி வைத்தான். பையனும் படிப்பு முடிந்து திரும்பி வந்து கோட்டை முத்துவைப் பார்க்கவும் சற்று வெலவெலத்துத்தான்

போனான். கோட்டை முத்துவின் கைகால்களில் முற்றிய தொழுநோயின் ஆக்ரமிப்பு.

முகத்தில் மூக்கெல்லாம் வெளுத்து பார்க்கவே விகாரமாய்...

"அப்பா..."

"கிட்ட வராதே..."

"எப்படிப்பா இப்படி...?"

"எதையும் கேக்காதே. உலகமே என்கைலன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். பணத்துக்கும் பஞ்சமில்லதான். ஆனா என் கை மட்டும் என்கிட்ட இல்லன்னு அப்புறம்தான் தெரிஞ்சிச்சு..."

"அப்பா... இதைக் குணப்படுத்த எவ்வளவோ மருந்து வந்தாச்சு."

"தெரியும்ப்பா... நான் இன்னிக்கு நேத்தா சாப்டுகிட்டு வரேன். அந்த மாத்திரை மருந்தைச் சாப்ட்டதாலதான் இவ்வளவு நான் தாங்கினுச்சு. இல்லாட்டி..."

- கோட்டை முத்துவின் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

மகன் ஆச்சரியப்பட்டான். அப்பா அழுது அவன் பார்த்தேயில்லை.

"அப்பா... எனக்கு ஏன் சொல்லலை?"

"இது என்ன கவர்மெண்ட் கொடுக்கற பட்டமா - சந்தோஷமா சொல்லிக்க? அசிங்கமான வியாதி. இது வந்ததுக்கு பிறகு என்கிட்ட ஒரு பய வரமாட்டேங்கறான். மாசம் ஒரு லட்சம் சம்பளம் தரேன்னேன்... ஊஹூம். ஒருத்தர்கூட வரலை. பணத்தை எப்ப வேணா சம்பாதிச்சுக்கலாம். முடியாட்டி கொள்ளை கூட அடிச்சிடலாம். ஆனா கையும் காலும் போனா அது எந்த கடைலயும் கிடைக்காதேன்னு எனக்கே தத்துவம் சொல்றானுங்க..."



"அப்பா... நான் இருக்கேன்பா... இனி நான் பாத்துக்கறேன்."

"வேண்டாம்ப்பா... நீயாச்சும் நல்லா இரு. உனக்கும் ஒட்டிக்க போகுது."

"இது தொத்து வியாதி இல்லப்பா..."

"தெரியும்பா. இருந்தும் சொல்றேன். நான் இப்ப உசுர் வாழறதே உனக்காகத்தான். சொன்னா கேளு. கிட்டையே வராதே. என்னையும் நான் சொல்ற இடத்துல கொண்டுகிட்டு போய் விட்று. செத்தா அங்கையே போட்டு புதைச்சுடு..."

"எங்கப்பா... காசி ராமேஸ்வரம்னு கடைசிக் காலத்தை எங்கையாவது..."

"இல்லப்பா... என்னோட காசியும் ராமேஸ்வரமும் ஒரு ரகசய இடம்தான். என்னவோ தெரியில... அங்க இருந்தா மனசு லேசா இருக்கு. கெட்ட எண்ணமும் தோணமாட்டேங்குது."

- என்று பாம்பு புத்து உள்ள ரகசிய இடத்துக்குக் கொண்டு போகச் சொன்னான் கோட்டை முத்து. மகனாலும் தவிர்க்க முடியவில்லை.

அந்த ரகசிய இடத்துக்கு வந்த பிறகுதான் தெரிந்தது அப்பா சொன்னது எவ்வளவு சரியென்று...

"அப்பா... இங்க எனக்குக்கூட மனசு லேசா இருக்குப்பா..."

"அதான் சொன்னேன். கதைல படிச்சிருக்கேன். விக்கிரமாதித்தன் சிம்மாசனம் புதைச்ச இடத்துல யார் இருந்தாலும் அவங்க புத்தி நல்லபடியாதான் வேலை செய்யும்னு. அந்த மாதிரி இங்கையும் ஏதாவது இருக்கணும்."

"அதெல்லாம் ஃபேண்ட்டஸி. அதைப்போய் நம்பிகிட்டு. நீங்க கவலைப்படாதீங்கப்பா. உங்களைக் குணப்படுத்த வேண்டியது என் பொறுப்பு."

"திரும்ப சொல்றேன். என் வாழ்க்கை முடிஞ்சு போச்சு. விட்று. நீ நல்லா இரு. என்னை யாரும் பார்க்க வரவும்

வேண்டாம். அதுக்கு இதுதான் ஏத்த இடம் என்ற கோட்டை முத்து மகனைப் பார்த்து லேசாக திரும்பவும் கண் கலங்கினான்.

அன்று இரவு பங்களாவில் முகத்துக்கு ஷேவ் செய்யும்போது கழுத்தைச் சுற்றி வெள்ளையாய் தடிப்பு. கை மணிக்கட்டிலும் தோல் பகுதி மரத்துப் போனதுபோல் இருந்தது கோட்டைமுத்துவின் மகனுக்கு... முதலில் சாதாரணமாகத்தான் நினைத்தான்.

அலர்ஜிக்கான மாத்திரைகள் சாப்பிட்டும் கேட்க வில்லை. இடுப்பில், தொடையில் என்று அங்கங்கே தேமல்போல தெரிந்து அங்கே தொட்டால் சொரணையும் இல்லை.

இறுதியில் ஸ்பெஷலிஸ்ட்டிடம் காட்டவும் அவர் எல்லா டெஸ்ட்டும் செய்து முடித்தவராக "இட்ஸ் எ ஒண்டர். லெப்ரசியோட ஸ்டார்ட்டிங் ஸ்டேஜ்..." என்றபோது ஆடிப் போய்விட்டான்.

"டாக்டர்..."

"டோண்ட் ஒர்ரி... உங்கள பரிபூரணமா குணப்படுத்திட முடியும்."

"இது தொத்து வியாதி இல்லதானே...?"

"டெஃபனட்லி..."

"என் அப்பாவுக்கு வெரிசீரியஸ் கண்டிஷன். அதனால அவர்கிட்ட இருந்து எனக்கும்..."

- டாக்டரே அதைக்கேட்டு ஆடிப்போனார். ரகசிய இடத்துக்கே வந்து கோட்டை முத்துவைப் பார்த்தவர் கோட்டை முத்து எதிரிலேயே "இவரோட ஃபார்மேஷனுக்கும் உங்களுக்கும் நிறைய வித்யாசம் இருக்கு..." என்று கூறவும் கோட்டை முத்துவுக்கு தலையில் இடிவிழுந்த மாதிரி ஆயிற்று.

"தம்பி... உனக்குமா இந்த வியாதி..." என்று ஒரு கத்து கத்தியதில் அந்த அறையே நடுங்கியது.



"என்ன டாக்டர் இப்படிப் போட்டு உடைச்சிட்டீங்க?" என்று அவனும் வருத்தப்பட, டாக்டரும் கையைச் சொடுக்கிக் கொண்டார். சாரி சொல்லிவிட்டுச் சென்றார். அதன்பின் கோட்டை முத்துவுக்குப் பைத்தியம் பிடிக்காத குறை...

"சாமி... நீ உன் சக்தியைக் காமிச்சிட்டே... நின்னு கொன்னுட்டே... அன்னிக்கே செத்துட்ட அவனுங்ககூட தேவலை. ஆனா என்னை நீ பழிவாங்கிட்டே..." என்று ஒரே புலம்பல். மகனும் "என்ன புலம்பல்?" என்று கேட்க, "அதை எப்படிச் சொல்லுவேன்... தம்பி வாழ்க்கைல ஒழுக்கமா இல்லைன்னா என் கதிதான்... பாரு... சுடுகாட்டுல வெட்டியான்கூட கையால என்னைத் தொட மாட்டான். இந்த வியாதி என்னோட போயிடும்னு பார்த்தா உன்னையும் பிடிச்சுகிச்சே... எத்தனை கோடி இருந்து என்னப்பா பிரயோஜனம்? பணத்தைத் தின்னா இந்த வியாதி குணமாகுமா...? போச்சு... போச்சு... எல்லாமே போச்சு. ஊரே கும்பிட்ட அந்த மரகதலிங்க சாமியைக் களவாடச் சொன்னேன். இப்ப ஊரும் உருப்படியா இல்லை. நானும் நல்லபடி இல்லை... இதுக்கு மேலயும் உசுரோட இருந்து உனக்கும் பாரமா இருக்கறதுக்கு நான் செத்துட்றேன் பா... செத்துட்றேன்..." - என்ற கோட்டை முத்து ஆவேசமாக எழுந்து பாம்பு புற்று நோக்கிச் சென்றவன் - அப்படியே புற்றுக்குள் கையை விட்டுவிட்டான்.

"அப்பா..." மகன் ஓடிவந்து கையைப் பிடித்து இழுக்க அந்த வேகத்தில் புற்று இடிபட, உள்ளிருக்கும் பாம்புகளும் சீறிக் கொண்டு பாய முற்பட, அதைப் பார்த்து அப்படியே புற்றின் மேல் விழ - முற்றிலுமாக புற்று நொறுங்கியது. கோட்டை முத்துவோ உள்ளிருந்த மரகத லிங்கத்தின் மேல் சரியாக தலைபாகம் வணங்குவது போல விழுந்து அப்படியே மயங்கியும் விட்டான்.

பல வருடங்களுக்குப் பிறகும் அந்த மரகதலிங்கம் துளியும் ஒளியை இழக்காமல் பளபளவென்று...

மகனுக்குப் புரிந்துவிட்டது.

கோட்டை முத்து சொன்ன அந்த மரகதலிங்கம்...

அதே மரகதலிங்கம்...

இங்கே... இங்கே எப்படி?

சிலிர்த்துப் போய் நிற்க - பாம்புகளும் ஏதோ சத்தியத்துக்கு கட்டுப்பட்டதுபோல விலகி ஓட - கோட்டை முத்து கண் விழித்துப் பார்த்த போது அப்படியே புல்லரிப்பு ஏற்பட்டது.

''தம்பி... இதுதான் சிவன்குடி மரகதலிங்கம். நான் கஜேந்திர பாண்டிங்கறவன்கிட்ட சொல்லி களவாடச் சொன்னேன். பதினெட்டு வருஷம் முந்தி நடந்த விஷயம். அன்னிக்கு இதே இடத்துல கஜேந்திர பாண்டி மட்டும் பாம்பு கடிச்சு செத்துக் கிடந்தான். ஆனா லிங்கம் எங்க போச்சுன்னு தெரியில. அவன்தான் இந்த புத்தை சரியான பாதுகாப்பான இடமா கருதி போட்டு வெச்சிருக்கான். அது அப்ப எனக்குத் தெரியல... இன்னிக்கு நல்ல புத்தி வரவும் கண்ணுல பட்டுருக்கு.

ஐயா... நமக்கு மேல ஒரு சக்தி இருக்கத்தான்யா செய்யுது. அது நமக்கு நிறைய சந்தர்ப்பமும் தருது. நாமதான் புரிஞ்சுக்காம தப்பு பண்ணிட்றோம். அதுலையும் நான் பண்ண தப்பு உன்னையுமல்லவா பாதிச்சிடிச்சு...''

கோட்டை முத்து விசும்பி விசும்பி அழுதான்.

''அப்பா... நடந்தது நடந்து போச்சு. பண்ண தப்புக்கு பரிகாரம் தேடுவோம். இந்த லிங்கத்தை சிவன்குடி கோயில்ல கொண்டு சேப்போம்...''

''எப்படி தம்பி... அந்த ஊரே இப்ப இருண்டு கிடக்கு. கோயிலும் இப்ப அங்க கோயிலா இல்லை. சாமி அங்க இருந்து வெளியேறின பிறகு ஊரும் சுடுகாடாயிடிச்சு.''



''அப்படின்னா சாமி அங்கபோனா நிச்சயம் சிவன்குடி நந்தவனமாயிடும்பா...''

''அதுல எனக்கும் சந்தேகம் இல்லை. ஆனா இந்த சிலை உன்கிட்ட எப்படி வந்ததுன்னு கேட்டா என்ன சொல்வே...''

''நடந்ததை அப்படியே சொல்லுங்கப்பா...''

''நான் சொல்றேன். இந்த அழுகிப் போன உடம்பைத் தூக்குல போட்டாத்தான் என்ன, போடாட்டிதான் என்ன... ஆனா அந்த ஊர்ல யாராலையும் கோவிலை எடுத்துக்கட்ட முடியலைன்னு கேள்விப்பட்டேன். அப்படி யாராவது நடந்துகிட்டா சாமி அவங்களைத் தண்டிச்சிடுதாம்...''

''இங்க உங்களப்போல அங்கையும் யாரோ இருக்காங்கபோல. அதான் காப்பாத்த மட்டுமே தெரிஞ்ச சாமியையே குற்றவாளியாக்கியிருக்காங்க. இதை விடக்கூடாது. நானும் விடமாட்டேன்.''

''உன்னால முடியுமா?''

''நிச்சயமா முடியும். இன்னிக்கு புறப்பட்றேன்.''

''கவனமா போய் வா. நம்ம சொத்தே போனாலும் கவலை இல்ல. சிவன்குடி பழையபடி ஆயிடணும். பூட்டும் சாவியும்தான் சாமின்னு கேலி செஞ்சவன் நான். அதுக்குப் பரிகாரம் சிவன்குடியைப் புதுப்பிக்கறதுதான்...''


''உங்க நம்பிக்கை வீண் போகாதுப்பா... பூட்டும் சாவியும்கூட சாமிதான்... ஏன்னா அதுவும் அதுக்குள்ள வைக்கற விஷயங்கள் காப்பாத்திக் கொடுக்குது இல்லையா?''

-என்று பதிலுக்குக் கேட்டுவிட்டு அவனும் புறப் பட்டான்.

*-*-*

## பனி லிங்கம்

7



லிங்கங்களில் அமர்நாத் குகையில் உள்ள பனிலிங்கம் மிக விசேஷமானது. மற்ற லிங்கங்கள் மனிதர்களோ, இல்லை தேவர்களோ உருவாக்கியவை. ஆனால் பனி லிங்கம் மட்டும் காலத்தால் பஞ்ச பூதங்களால் உருவாகிறது. மலைக் குகையாகிய நிலத்தின் மேல் குளிர்ந்த நீர் காற்றால் உறைந்து கட்டிக் கொண்டு விட குகை கூரையே ஆகாயமாகத் திகழ லிங்கம் உருவாகிறது. பின் அக்னியாகிய வெப்பம் அதிகரிக்கும்போது அப்படியே உருகி இல்லாமல் போய்விடுகிறது.

'காலம் செய்யும் லிங்கம்' என்று இந்த பனி லிங்கத்தைக் கூறுவர். காலத்தால் வரும் துயரங்களுக்கு இந்த பனிலிங்கத்தை வணங்குவதுதான் உகந்த பரிகாரம்!

பாண்டியராஜன் நடந்த அவ்வளவு விஷயங் களையும் கூறி முடித்து விட்டு சட்டையையும் கழற்றி வயிற்றில் இடுப்பில் பரவியிருக்கும் தேமலையும் காட்டியபோது இன்ஸ்பெக்டர் ராமன் அப்படியே விக்கித்து போய்விட்டார்.

குருக்கள் ஓடிச்சென்று சுவாமி படம் முன் நின்று படபடவென்று கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

'வாட் எ மிராகிள்...' - என்று இன்ஸ்பெக்டர் ராமனிடம் ஒரு சிலிர்ப்பான குரல்.



ஐஸ்வர்யாவும் சிலிர்த்துப் போயிருந்தாள்.

''எந்த பூட்டும் சாவியும் கூட ஸ்வாமிதான்னு நீங்க சொன்னேளே அந்த சாவியை நான் மறந்து எடுக்க வந்ததாலதானே உங்களை நான் பார்த்தேன்... எந்தப் பாம்பு அங்க புத்துக்குள்ள மரகதலிங்கத்தைப் பாதுகாத்ததோ அது கடிச்சதாலதானே இந்த கம்பவுண்டர் உங்களுக்கு விஷ ஊசி போட்றேன்னு வந்து மாட்டினான். இவனால் இந்த பக்கம் நடந்தது தெரிஞ்சது. உங்களால் அந்த பக்கம் நடந்ததும் தெரிஞ்சிடுத்து. இதை என்னன்னு சொல்ல...'' என்றபடியே குருக்கள் மாறி மாறி கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

ஐஸ்வர்யா பாண்டியராஜன் அருகில் வந்தவளாக ''சார்... டெஃபனட்டா உங்களுக்கு பரிபூரணமா குணமாயிடும் சார்...'' என்றாள்.

''இவருக்கு மட்டுமா... இனி சிவன்குடியே பரிபூரணமா மாறப் போகுது நீ என்னம்மா?'' என்றார் இன்ஸ்பெக்டர்ராமன்.

வெளியே ஆமோதிப்பதுபோல் இடி சப்தம். சடசட வென்று மழைவேறு கொட்ட ஆரம்பித்தது. பாண்டியராஜன் ஒரு வினாடி கண்களை மூடியவனாக 'ஓம் நமசிவாய' என்றான். வானிலும் ஒரு மின்னல்! அதே சிவலிங்க வடிவத்தில்...

தற்செயலா? அற்புதமா?

-முற்றும்-